SWATHANTRA SANGU

Regd. No. M. 281

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

முக்கிய விஷயங்கள்

மாலை மாற்று மாப்பிள்ளைகள்
(படத்துடன்)
சாவுகாரும் தேவதையும்
(பாலர் கதை)
மண்டையில் களிமண்
(படம்)
ஸ்ரீ கிட்டப்பா
தாஜ்மஹால்
(சங்கரன்)
கொலம்பஸ்
பலி!
(கதை)

புத்தகம் 4. கார்த்திகை 23 (8-12-33) வெள்ளி இதழ் 3.

MAHATMA GANDHI

WILL OPEN

The Industrial School & Welfare Centre

AT KODAMBAKKAM

Date and time will be announced later.

Advisory Board:

C. Abdul Hakim, *President.*
Dr. P. Subbarayan, M.L.C.
Ramnath Goenka, Dubash.
Rao Bahadur L. C. Guruswamy, M.L.C.
Devsee Moolchand, Merchant.
Capt. V. D. Nimbkar, *Eye Surgeon.*

Working Committee:

Roopchand Pratap Mull, Banker.
R. V. Sastri, Editor, "Harijan," Treasurer.
S. Ganesan, Secretary and Agent.

Contributions will be welcomed and may be sent to the Secretary or Treasurer.

Office:—8, Pycrofts Road, Triplicane, Madras.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription:

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$.

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office: 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு		ரூ.	40	0	0
அரைப் பக்கத்திற்கு	" "	ரூ.	20	0	0
கால் பக்கத்திற்கு	" "	ரூ.	10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு	" "	ரூ.	1	8	0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மேடுத்தோதுவோமே "

போன் நெ. 8088

ஆசிரியர் : சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] கார்த்திகைமீ 23உ வெள்ளிக்கிழமை (8—12—1933) [No. 3

மாலை மாற்று—மாப்பிள்ளைகள்

"இந்தியாவினின்று கூட்டுக் கமிட்டிக்கு வந்த பிரதிநிதிகளை என்னென்பேன்! இந்தியாவையும் பிரிட்டனையும் சேர்த்துக் கட்டுவதற்கான தங்கச் சங்கிலிகளென்றே அந்தப் பிரதிநிதிகளைக் கூறவேண்டும்!" என்று ஆர். எ. பட்லர் என்பார் பார்லிமெண்டில் பேசினார். இந்தியா மந்திரிக்குக் காரிய தரிசியாக உள்ளவர் மிஸ்டர் பட்லர்.

ஆனால் பட்லர் கூறியதில் ஓர் உண்மை மட்டும் நமக்குத் தெரிகின்றது. 'கூட்டுக் கமிட்டிக்குப் போன பிரபுக்கள் இந்தியாவை பிரிட்டனோடு இறுகக் கட்டிப்போட முயன்றார்கள்' என்ற கருத்துமட்டும் முற்றிலும் சரி. பாரத நாடு சுதந்திர நாடாக ஆகக் கூடாது, அது என்றைக்கும் பிரிட்டானியாவுக்கு அடிபணிந்து வாழவேண்டியதுதான் என்ற கருத்துக்கொண்ட இந்தியப் பிரகஸ்திகள்தான் சீமைக்குச் சென்றார்கள். இந்த உண்மையை மிஸ்டர் பட்லர் வாய் தவறிச் சொல்லிவிட்டாரென்றே தோன்றுகிறது.

மிஸ்டர் பட்லர் அத்துடன் நிற்கவில்லை. இந்தியா மந்திரியாக இன்றைக்கு உத்தியோகம் பார்க்கும் ஸர் ஸாமுயேல் ஹோரின் மீது அவர் பாடிய அஷ்டோத்தரமும் கவனிக்கத் தக்கதுதான். "அடடா! எங்க ஹோரர் துரையின் சமத்தே சமத்து! 75 மணி நேரம் அவர் சாட்சிக்கூண்டிலே நின்று 5000 கேள்விகளுக்கு அஞ்சாது பதிலளித்தார்" என்று கூறினார். கூட்டுக் கமிட்டிக்குச் சென்றிருந்த கூட்டத்தார் முன்னே 5000 அல்ல 50 ஆயிரம் கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிடலாமே! பேசும்போது வாதாடுவதற்குத் தைரியமுடைய, அறிவுடைய பேர் வழிகள் எதிரேயில்லாது போனால், எத்தனை கேள்விகளுக்குத்தான் ஹோரர் பதில் சொல்ல மாட்டார்? தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் தானே! 5000 பதில்கள் விடுத்தாரென்ற கணக்கை பட்லர் தந்ததைக்காட்டிலும் கூட்டுக் கமிட்டி சம்பந்தமாக எத்தனை சமாராதனைகள் நடந்தன என்ற கணக்குக் கொடுத்திருந்தாரானால், மிக்க ருசிகரமாயிருக்கும்.

இந்தப் பரஸ்பரப் பரிமாறலில் வைஸ்ராய் வில்லிங்டன் பிரபுவை மறந்துவிட்டார்களா என்று வாசகர் கேட்கலாம். இல்லை, மறக்கவேயில்லை. சீமையினின்று புறப்படும்போது கஸ்னவி சாயபு வில்லிங்டன் பெருமானுக்கு ஓர் புகழ்மாலை சூட்டினார். "வில்லிங்டன் பிரபு இவ்வளவு சாமர்த்தியமாக, அமைதியாக, நாட்டை ஆண்டதினாலல்லவோ எங்களால் கூட்டுக் கமிட்டியைச் செவ்வனே நடத்தமுடிந்தது" என்று கூறினார். 'நேசனைக் காணாவிடத்தே நெஞ்சாரவே துதித்தல், ஆசானை எவ்விடத்துமப்படியே!" என்ற பாட்டையும் கடந்துவிட்டது கஸ்னவி சாயபுவின் பக்தி!

இப்படி பரஸ்பரம் மாலை மாற்றிக் கொள்ளும் மாப்பிள்ளைகளின் கையில் ஒரு தேசத்தின் ராஜீய வாழ்வு இருந்ததானால், அந்த தேசத்தின் தலைவிதி எப்படிப் போகுமென்று சொல்ல வேண்டுமோ? சங்கிலியால் பிணிப்பதற்கே ஏற்பாடுகள் நடக்குமென்பதில் சந்தேகமுமுண்டா?



" இந்தியாவை பிரிட்டனோடு கட்டும் சங்கிலி "

—*Courtesy* : ஹி. டைம்ஸ்.

காரியக் கமிட்டி நடக்குமா?

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி ஆலோசிக்குமா? அல்லது கூடவே போவதில்லையா? அங்கத்தினர்கள் 'கமிட்டி' என்ற தோரணையோடு கூடுவார்களா? அல்லது தேசியத் தலைவர்கள் வெறுமனே ஓரிடத்திலுட்கார்ந்து சம்பாஷணை செய்வதாக ஆகப்போகிறதா? இன்னும் சில வாரங்களுக்குள் இந்த விஷயம் தெரிந்துவிடும். ஆனால் இந்த யோசனை புறப்படுவதற்கு முன்னமேயே டெல்லி சர்க்கார் ஏதோ ஓர் முடிவு செய்து விட்டதாக டெல்லியினின்று ஓர் செய்தி கிட்டுகிறது. 'காங்கிரஸ் காரியக் கமிட்டி' என்ற கூட்டம் எங்கு கூடினாலும் அதைத் தடுத்துவிட வேண்டுமெனக் கராரான உத்தரவு போட்டுவிட்டு வில்லிங்டன் துரை பவனி புறப்பட்டிருப்பதாக 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' சொல்லுகிறது.

கவுரவமான ராஜிக்குக் காங்கிரஸ்காரர்கள் எப்போதும் தயாராயிருப்பவர்கள். அத்தகைய ராஜி ஏற்படா வண்ணம் அடிக்கடி சர்க்கார் தரப்பிலிருந்தே 'தடை' ஏற்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்திலும் டெல்லி துரைத்தனம் தனது இரும்புக் கையைக் காட்டுமேயானால் சர்ககாருடைய மூளையில் அபிவிருத்தி யேதும் ஏற்படவில்லை யென்றுதான் அர்த்தம். ஆயிரம் தடவை காங்கிரஸ் கமிட்டியைத் தடுத்த போதிலும் 'காங்கிரஸ்' என்றபெயரை இந்தத் தேசத்தினின்று அழித்துவிட முடியுமா? அவ்வாறு அடக்குமுறைப் பாணங்களை அடிக்கடி வீசுவதால் தேசத்தில் சமாதானத்தைத்தான் உண்டாக்கிவிட முடியுமா? இந்த சமயத்தில் காங்கிரஸ் கமிட்டி கூடா வண்ணம் முட்டுக் கட்டை போட்டால் சர்க்கார் தங்கள் வறட்டு ஜம்பத்தை வற்றல்போட்டு வைத்துக் கொள்வதாகத்தான் அர்த்தம்; சமாதானத்துக்குச் சாவுமணி அடிப்பதாகத்தான் பொருள்; இராஜீய மூளையையே டெல்லி இழந்து விட்டதாகத்தான் தாத்பர்யம், என்ன ஆகிறதோ பார்ப்போம்?

பம்பாய் வால் நீட்டம்

'முன்னே மணியோசை' என்ற ரீதியில் பம்பாய்த் துரைத்தனம் ஓர் காரியம் செய்திருக்கிறது. பம்பாயில் இப்போது அமுலிலுள்ள அவசர அதிகாரச் சட்டம் அடுத்த டிசம்பர் மாதத்தோடு சாகவேண்டிய சட்டமாகும். அதற்கு இன்னும் ஒரு வருஷத்திற்கு உயிர் கொடுத்து நீட்டி விட்டிருக்கிறார் பம்பாய் கவர்னர்.

"பொதுஜன அமைதியைக் குலைப்பதற்கான சில சம்பவங்கள் நிகழ்ந்தாலும், சட்ட மறுப்பை அடியோடு எல்லாக் காங்கிரஸ்காரர்களும் மறந்து விடாதபடியினாலும், தேசத்தில் துரைத்தனத்துக்குஎதிராக--முதலாளிகளுக்கு எதிராக—பொது மக்களைத் தூண்ட யோசனைகள் செய்யப்பட்டு வருவதாலும்" மேற்படி சட்டத்தை இன்னும் ஒரு வருஷத்துக்கு நீட்டியிருப்பதாக பம்பாய்த் துரைத்தன அறிக்கை சொல்கிறது. ஐயோ பாவம்! "எல்லாம் ஒய்ந்து விட்டது இந்தியாவில்" என்று இங்கிலாந்தில் சொல்லிக் கொண்டிருந்த பிரிட்டிஷ்காரர்கள் இவ்வளவு பகிரங்கமாக பம்பாய்க் கவர்னர் தன்னைக் காட்டிக் கொண்டாரே யென்று கவலைப்பட்டாலும் படுவார்கள்.

ரிஸர்வ் பாங்கி வம்பு

ரிஸர்வ்பாங்கி மசோதா டெல்லி சட்டசபையில் சதிருக்கு வந்தது. அதற்கு சுமார்200 திருத்தப் பிரேரணைகள் வந்திருப்பதினின்றே அந்த மசோதாவின் யோக்யதையைப் பொது ஜனங்கள் ஊகிக்கலாம். எப்படியாவது, எப்பாடு பட்டாவது இந்த சட்டசபையிலேயே ரிஸர்வ் பாங்கி மசோதாவைச் சட்டமாக்கிக் கொள்ளவேண்டு மென்பது சர்க்காருடைய விருப்பம். இனி மேல் வரப்போகும்சட்டசபை யெவ்வாறிருக்குமோ என்ற பயமும் உள்ளூர சர்க்காருக்கு உண்டு போலிருக்கிறது. ஆகவே 'ஜோஹுகும்' பேர்வழிகளடங்கிய இந்த சட்டசபையிலேயே காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டுமென்றும், "இந்தியர்களின் பிரதிநிதிகளடங்கிய சட்டசபை செய்தது" என்று லேபிள் போட்டுவிட வேண்டுமென்றும் ஸர் ஜார்ஜ் ஷூஸ்டர் கஜகர்ணம் போடுகிறார். இப்போதுள்ள சட்டசபையில் அந்த மசோதா நிறைவேறிவிட்டாலும் நாம் அதற்காக ஆச்சரியப் படுவதற்கில்லை.

"எக்ஸ்பெரிமெண்ட்"

இது ஒரு அருமையான ஆங்கிலப் பதம். இந்தியாவிலுள்ள வெள்ளைக்கார அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டு இது 'திருபிரு' வென்று விழிக்கின்றது. இந்திய இராணுவத்தின் சேனாதிபதியாக இருக்கும் ஸர் பிலிட் சேட் வோட்துரை சமீபத்தில் ஓர் பிரசங்கம் செய்தார். "இந்தியர்களுக்கும் இராணுவப் பயிற்சி தர வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆகவே இந்திய மாணவர்களும் இராணுவக் கலாசாலையில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். இந்த 'எக்ஸ்பெரிமெண்ட்' இந்த ஒரு வருஷத்தில் நல்ல முன்னேற்ற மடைந்திருக்கிறது" என்று அவர் கூறினார். 'எக்ஸ்பெரிமெண்ட்' என்ற பதம் வேணுமென்றே பிரயோகம் செய்யப்பட்டிருப்பதென்னவோ, வாஸ்தவம். இந்தியர்களுக்கு இராணுவத் திறமை வருமா வராதா என்று பதம் பார்ப்பதற்கா, 'எக்ஸ்பெரிமெண்ட்' செய்வதற்கா இவரிடம் சொன்னார்கள்? இராணுவத்தை இந்திய மயமாக்க வேண்டு மென்பது சர்க்காருடைய கொள்கை (Policy) என்பது உண்மையா? அல்லது வெறும் பரீக்ஷை (Experiment) என்பது உண்மையா?

கதை கதையாம் காரணமாம்

இந்தியாவில் சிக்கனமாக அரசாட்சியை எப்படி நடத்துவதென்பதை ஆராய்ச்சி செய்ய ஓர் ஸர்வேக் கமிட்டி ஏற்படப் போகிறதாம். அந்தக் கமிட்டியின் செலவுக்காக 60 ஆயிரம் ரூபாய் என்ற அற்பத் தொகை 'ஸாங்ஷன்' செய்யப் பட்டிருக்கிறதாம். கமிட்டியின் ஆராய்ச்சி என்ன வாகுமோவாம்! சுண்டைக்காய்க் கால்பணமாம்—சுமை கூலி முக்கால் பணமாம்!

அயோக்கியத்தனமே!

"பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் சிலவற்றில் ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் சாமான்களை பிரிட்டிஷ் சாமான்களென்று பொய் முத்திரை யிடப்பட்டு விற்கப்படுகின்றன. இது அயோக்கியத்தனம். இந்த அயோக்கியத்தனத்தை நிறுத்தத் துரைத்தனத்துக்கு உரிமை உண்டு" என்று வால்டர் ரன்ஸிமென் என்ற பிரிட்டிஷ் வர்த்தக மந்திரி கூறியிருக்கிறார்.

ஜப்பான் சாமான்கள் பிரிட்டிஷ் சாமான்களென வருணிக்கப்பட்டு விற்பனையாகின்றதோ இல்லையோ, நமக்குத் தெரியாது. ஆனால் லங்காஷயரினின்று வரும் பிரிட்டிஷ் துணி வகையராக்களை 'சுதேசி' என்று பொய் கூறி விற்று விடும் வாடிக்கை இந்தியாவிலிருக்கிறது. இந்த அயோக்கியத்தனத்தையும் இந்திய சர்க்கார் கவனிக்குமா?

மாளாத யோசனை!

தொண்டைக் குழியில் வாங்கிக் கொண்டிருந்தாலும் யோசனைதானா? மிராசுதாரர்கள் வரிச்சுமை தாளாமல் அலறிக்கொண் டிருக்கிறார்கள். சென்னை சர்க்காருக்கு இப்பொழுதுதான் யோசனை தோன்றி யிருக்கிறதாம். கலெக்டர்களிடமிருந்து யாதாஸ்துக்கள் வந்து சேர்ந்து விட்டனவாம். (1) நிறுத்தி வைத்திருக்கும் கிஸ்தியை வஜாவாகவே செய்துவிடலாமா? (2) அல்லது இன்னும் சில காலம் வசூலைத் தள்ளி வைக்கலாமா? (3) அடுத்த பசலியில் ஏதாவது தள்ளிக் கொடுக்க வேண்டியதுதானா? இவ்வாறு சென்னைத் துரைத்தனம் யோசித்துக் கொண்டிருக்கிறதாம். என்ன மாளாத யோசனையோ இது!

பஹுத் அச்சா ஹை!

பலிக்காது, வக்கீல் நண்பரே! இனிமேல் ஹிந்திப் பரிட்சை கொடுக்காவிட்டால், நீர் பரோடாவில் தொழில் செய்ய முடியாது. கோர்ட் தஸ்தாவேஜி யெல்லாம் நமது தேசிய பாஷையான ஹிந்தியிலேயே இருக்கவேண்டும். அங்கு நடக்கும் பேச்சுக்களும் ஹிந்தியில்தான் இருக்கவேண்டும் என்று அங்கே ராஜாக்ஞை பிறந்து விட்டது. பஹுத் அச்சா ஹை, பரோடா!

இரண்டாட்டில் ஊட்டிய குட்டி

ஹைதராபாத் இராஜ்யத்திற்கு அருகில் பீரார் இருக்கிறது. அந்தப் பாகம் தன்னுடைய ராஜ்யத்தோடு சேர வேண்டுமென நிஜாம் வெகு பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார். விவகாரம் ஒரு தினிஸாய் முடிந்திருக்கிறதாம். முடிவு 'ஒரு தினிஸு' என்றாலும் ஆட்சி இரண்டு விதமாக பீராரில் இருக்கப்போகிறது. பீரார் மத்திய மாகாணத்தோடுதான் சேர்ந்திருக்குமாம். ஆனால் அநுபவத்தில் நிஜாமின் சக்கிராதிபத்தியமும் இருந்து வருமாம். இரண்டாட்டில் ஊட்டிய குட்டியின் கதையாக பீராரிலுள்ள ஜனங்களின் வாழ்வு இருக்கப்போகிறது. அதிருக்கட்டும்! திரைக்குப் பின்னால் இப்படி பிரிட்டிஷ் அரசாங்கமும் நிஜாம் அரசாங்கமும் ஏதோ முடிவு செய்துகொண்டு விட்டார்களே, அந்தப் பிரதேசத்திலுள்ள பொது ஜனங்களை ஒரு வார்த்தையாவது கேட்டார்களா? இந்த அரசினின்று அந்த அரசுக்குத் தள்ளப்படுவதற்கு பொது ஜனங்கள் ஏதாவது ஜட வஸ்துக்களா? அல்லது ஆட்டு மந்தைகளா?

"நாட்டு மாந்தரெல்லாம் - தம்போல்
நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தையாமென் றுலகை
அரசரெண்ணி விட்டார்" என்ற

பாரதியார் வரிகளுக்கு அட்சர லட்சம் கொடுக்கவேண்டுமென்றோ!

வெற்றிலையும் சுருட்டும்

தென்னாட்டில் ஒரு முனிஸிபல் கூட்டத்தில் அங்கத்தினர்களுக்குள் பிரமாதமான வாக்கு வாதம் நடைபெற்றது. விஷயம் சிறியதுதான். "சபைக் கூட்டம் நடக்கும்போது ஒருவர் வெற்றிலை பாக்குப்போட்டுக் கொள்ளலாமா, கூடாதா" என்பது வெகு கடுமையாக வாதிக்கப்பட்டது. வாதம் உச்சத்திலிருக்கும்போது இன்னொருவர், "அப்படியானால் நான் இந்தக் கூட்டத்தில் சுருட்டுக் குடிப்பேன்" என்று சுருட்டையும் வத்திப் பெட்டியையும் எடுத்தார். கடைசியாக வெற்றிலை மென்றவர் வாய் வெற்றிலையும் கரைந்து போய் விட்டது; சண்டையும் சமாதானமாயிற்று. "இத்தகைய வாக்கு வாதத்திற்காகவா இவர்களை முனிஸிபாலிட்டிக்கு வோட்டுக் கொடுத்து அனுப்பினோம்!" என்று ஓர் வோட்டர் நினைக்கலாமா? கூடாதா?

5 ரூபாய்க்கு ஆயிரம் அப்பளாம்

தங்கள் வீடு தேடி வரும்.

இன்றே 5 ரூ. மணியார்டர் செய்யுங்கள்.
சமீப ரயில்வே ஸ்டேஷனையும் குறிப்பிடுக.

ஸன்-ஸம் கம்பெனி,
வடகம், வத்தல், அப்பளாம் வியாபாரிகள்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

கேசவர்த்தினி

மயிர் உதிர்வதை நிறுத்துவது.

வழுக்கை செம்பட்டை இள நரைகளைப் போக்குவது.

கூந்தலை நீண்டு செறிந்து வளரச் செய்வது.

விலை அணா 12. மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை, லஸ், மயிலாப்பூர்.

கஸ்தூரிபாய்க்குச் சிறை

கஸ்தூரிபாய் காந்தியைக் கைது செய்து யாதொரு விசாரணையும் செய்யாமல் ஸபர்மதி சிறைக்குக் கொண்டு போய் விட்டார்கள். சென்ற ஆகஸ்டு மாதத்தில் மகாத்மா உபவாச விரதம் தொடங்கிய போது கஸ்தூரி பாயைச் சிறையினின்று விடுவித்தார்களல்லவா? அப்போது பாக்கியாகி விட்ட 5 மாதச் சிறை வாசத்தையும் இப்போது கஸ்தூரிபாய் அநுபவிக்க வேண்டுமாம்! வேகு பேஷ்! காந்தி-இர்வின் ஒப்பந்த காலத்தில் அநேக பேர்கள் சிறைவாசத் தண்டனைக் காலம் முடிவு பெறாமலே விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களை இப்போது மறுபடியும் உள்ளே பிடித்துத் தள்ளி, "விட்ட குறை தொட்ட குறையைத் தீர்த்துவிட்டுப்போ" என்று அதிகாரிகள் சொன்னாலும் சொல்வார்களோ என்னவோ, யார் கண்டது?

அன்னையின் பலிபீடத்தில்

நமது ஆரியா வர்த்தம் தியாக பூமி. அன்னையின் பலிபீடத்தில் உயிரை அர்ப்பணிக்கும் மகா தியாகிகள் அவ்வப்போது இந்த நாட்டில் தோன்றிக் கொண்டிருப்பதால், இந்த பூமி இவ்வளவு ஸ்திதியிலாவது இருந்து கொண்டிருக்கிறது. பாரததேவி தந்த ஜோதி மைந்தர்களுள் ஸ்வாமி சிரத்தானந்தரும் ஒருவர். டெல்லியில் பீரங்கிகள் முழங்கிக்கொண்டிருந்தபோது மார்பைத் திறந்து "குண்டை என்மேல் போடுங்கள்" என்று கூறிய வீரச்சொல் ஸ்வாமி சிரத்தானந்தருடையது. தெற்கேயுள்ள வைக்கமென்ன, ஹிமாலயத்திலுள்ள காங்கிரி குருகுலமென்ன இப்படிப் பற்பல இடங்களிலும் ஹரிஜன சேவைக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த உத்தம சங்யாசி சுவாமிஜி. மூட நம்பிக்கைகளையெல்லாம் உடைத்தெறியும்படி மக்களுக்கு அறிவுறுத்திக் கொண்டிருந்த வீரர் அவர். யாரோ ஒரு வெறியன் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். ஆனால் அவருடைய ஆத்மாவுக்குப் பிரியமான ஹரிஜன இயக்கம் கம்பீரமாக நடைபெறுகின்றது. சென்ற வாரத்தில் வடநாட்டார் சிரத்தானந்த வாரத்தைச் சிறப்பாகக் கொண்டாடினர். நாமும் நமது வணக்கத்தை, பூஜ்ய புருஷனுக்குச் செலுத்துகின்றோம்.

வெளிநாட்டில்

பிரிட்டனின் பிரதிவாதி

விவகாரம் முற்றிவிட்டது. அயர்லாந்து பிரிட்டனை விட்டுப் பிரிந்து, சுயேச்சையான குடியரசு பெறவேண்டுமென்பதில் வீரன் டிவாலரா முனைந்து நிற்கிறான். "நாங்கள் குடியரசை ஸ்தாபித்துக் கொண்டோமானால், நீங்கள் என்னதான் செய்வதாக உத்தேசம்? அதை பகிரங்கமாகச் சொல்லித் தொலையுங்கள்" என்று டிவாலரா பிரிட்டனைக் கேட்டான். வியாபாரத்தில் தானே நஷ்டம் வரும்; வரட்டும். பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்துக்குள் ஐரிஷ்காரர்களுக்குச் சில உரிமைகளைத் தானே மறுப்பார்கள்; மறுக்கட்டும். சுதந்திரத்துக்கு முன்னே, இந்தக் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் ஒரு வீரன் பெரிதாய் மதிப்பானோ? தன் ஆயுளுக்குள்ளேயே அயர்லாந்துக்குப் பூரண சுதந்திரத்தையும் நிலை நாட்டாது விடமாட்டான் போலிருக்கிறது டிவாலரா. பிரிட்டிஷ் சிங்கத்தின் வாலை அவன் ஓயாது இழுத்துக் கொண்டே இருக்கிறான். பிரிட்டிஷ் சிங்கம் இப்பொழுது என்ன செய்யப் போகிறதென்று பார்ப்போம்.

சாராய தடபுடல்!

எங்கே? எங்கே? ஒண்ணே முக்கால் நாழி மதுவிலக்கு தடபுடல் நடந்ததல்லவா? அந்த அமெரிக்காவில் தான் இப்பொழுது சாராய தடபுடல் ஆரம்பித்திருக்கிறது. வரும் பிப்ரவரிமீ 1௳யோடு அமெரிக்க ஐக்கிய சமஸ்தானத்தின் மதுவிலக்குச் சட்டம் பரலோகப் பிராப்தியடையப்போகிறதாம். அந்தத் திருநாளைக் கொண்டாட, அங்குள்ள ஓட்டல்களெல்லாம், வண்டி, ஏரோப்பிளேன் முதலியவற்றை நூற்றுக் கணக்காக இதற்காக வாடகைக்குப் பிடித் திருக்கின்றனவாம். (1) கானடா (2) அயர்லாந்து (3) இங்கிலாந்து (4) பிரான்சு (5) போர்த்துகீஸ் (6) ஆர்ஜெண்டைன் (7) சிலி ஆகிய நாடுகளெல்லாம் அமெரிக்காவுக்கு லட்சக் கணக்கான காலன் சாராயவகைகளை ஸப்ளை செய்ய முன் வந்திருக்கின்றனவாம். அட இழவே! போன பிசாசைத் திருப்பி யழைப்பதில் இவ்வளவு கோலாகலமா?

"நான் சர்க்கார் தாஸனல்ல"

லண்டன் கோர்ட்டில் மிஸ்டர் மாக்னாடன் என்பவர் ஒரு பிரசித்தி பெற்ற நீதிபதி. ஏதோ ஓர் வழக்கில் போலீஸ்காரர்களின் இரகஸ்ய தஸ்தாவேஜிகளைக் கொண்டு வந்து கோர்ட்டில் ஆஜராக்க வேண்டுமென்று அவர் உத்தரவிட்டார். போலீஸ் பேரதிகாரி அவ்வாறு இரகஸ்ய தஸ்தாவேஜியை பகிரங்கமாகக் கொண்டு வராதிருக்க சர்க்காருக்கு உரிமையுண்டு என்று வாதித்தார். நீதிபதி அந்த வாதத்தைக் கேட்கவில்லை. "நான் சர்க்கார் தாஸனல்ல. நீதி வழங்குபவன்" என்று கடுமையாக மிஸ்டர் மாக்னாடன் சொல்லி விட்டார். ஆகவே தஸ்தாவேஜு அம்பலத்துக்கு வந்தது. நீதிபதி அந்த தஸ்தாவேஜை எடுத்து நடுக்கோர்ட்டில் பகிரங்கமாக வாசித்துக் காட்டினார். இப்படியன்றோ சுதந்திரத்தோடு நீதிபதிகள் நடந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் பம்பாய் மாகாணத்தில் பல மாதங்களுக்கு முன்னே 'பர்தோலி விவசாயிகள் விசாரணை' நடந்ததே, அப்போது சில தஸ்தாவேஜுகளைக் காட்ட முடியாதென அதிகாரிகள் சொன்னார்கள். நீதிபதியும் ஆமாம்பாட்டுப் பாடவே விசாரணையினின்று பொதுஜனத் தலைவர்கள் விலகிக்கொண்டார்கள். 'பர்தோலி விசாரணை'யை இந்தியர்கள் எப்படி மறப்போம்? "நீதிபதி சர்க்கார் தாஸனல்ல' என்று அழுத்தந் திருத்தமாய்க் கூறிய ஜஸ்டிஸ் மாக்னாடனின் மொழிகள் இந்திய நீதிபதிகளின் தலையில் ஏறியிருக்குமா?

யுத்தப் பிசாசு!

"சென்ற ஐரோப்பிய யுத்தத்தின் போது 75 லட்சம் மனிதர்களை ஐரோப்பா பலி கொடுத்தது. யுத்தத்திற்குப் பிறகு பாதி ஐரோப்பியர்கள் சுதந்திர வாழ்க்கையை இழந்தனர். இந்த யுத்தப் பிசாசு இன்னமும் உலகினின்று ஒழியாதுபோலிருக்கிறதே" என்று 'எகானமிஸ்ட்' என்ற பத்திரிகை அழுதிருக்கிறது. ஐரோப்பாவில் எல்லா அறிஞர்களும் வரப்போகும் யுத்தத்தைப் பற்றியே ஸ்மரணைசெய்துகொண்டிருப்பது நல்ல காலத்திற்கா?

பலி !

(எகிப்திய தேசத்துக் கதை)

ராஜாதி ராஜனின் சமாதியைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். பாலைவனத்தின் நடுவே வெகு கம்பீரமாக அந்தக் கோபுரம் எழுப்பப் பட்டிருந்தது. இக் காலத்தில் 'பிரமிட்' என்று பிரமாதமாக வர்ணிக்கின்றோமே அது தான் அந்த அரசனின் சமாதி. அந்தக் கட்டிட வேலையை மேற்பார்வை யிட்டுக்கொண்டு மேங்கூ நின்றிருந்தான். வயிரம் போன்ற உடலினன்; ஆஜானுபாகு; அழகன். அன்றைக்கு அவனது எண்ணங்கள் வேறு எங்கேயோ போயிருந்தன.

நாலு வாரத்திற்கு முன்னே ஏதோ ஓர் காரியார்த்தமாகத் தான் அரண்மனைக்குப் போயிருந்ததையும், அங்கு அந்தக் 'குட்டியை' யதேச்சையாகக் கண்டதையும் அவன் நினைவுக்குக் கொண்டு வந்தான். அவள் அரண்மனையில் சாதாரண வேலைக்காரிதானுமே; இருந்தாலென்ன? அவள் அக்காட்டிலுதித்த தில்யமான ஓர் புஷ்பமல்லவா? யதேச்சையான சந்திப்பு—கண்டதும் காதல்—பிறகு இரண்டு மூன்று தடவை அவன் அவளைச் சந்தித்தாகி விட்டது. மனதை அவளுக்கு அவன் பறிகொடுத்து விட்டான். வேலைக் களத்திலிருக்குப்போது கூட அவள் உருவமே அவன் கண்முன் நின்று கொண்டிருந்தது. இன்று இரவு அவளைச் சந்திப்பதாக வாக்களித்திருந்தானல்லவா?

திடீரென கீழே வேலை யாட்களின் சத்தம் கேட்கவே தனது எண்ணங்களை மேங்கூ வரவழைத்துக் கொண்டான். ஒரு பெரிய கல்லை அடிமைகள் கோபுரத்தின் மீது ஏற்றிக் கொண்டிருந்தனர். பத்தொன்பது வருஷங்களாக வேலை செய்யப்பட்டு வந்த 'பிரமிட்' அப்போதுதான் முடியும் தருணத்திலிருந்தது. அப்பப்பா! அந்த செத்தவன் சமாதிக்காக என்ன ஏற்பாடுகள்! என்ன செலவு! நீல நதிக் கரையில் கல்தச்சர்கள் கல்லடித்துக் கொண்டிருந்தனர். தேசத்திலிருந்த குடியானவர்களெல்லாம் கல்லுஞ் சுண்ணும்பும் கொண்டுவந்து கொட்ட வேண்டுமென அரசன் கட்டளை யிட்டிருந்தான். அந்த ஆயிரக் கணக்கான மக்களின் உழைப்பை சீக்கிரத்தில் முடித்தாக வேண்டுமோம். ஏனெனில் வேலை செய்து வந்த குடியானவர்கள் 19 வருஷத்தை எண்ணி முணு முணுத்தார்களாம். அரசன் மேங்கூவுக்குக் கடுமையான உத்தர விட்டிருந்தான். 'கட்டிடத்தை அந்த மாதத்துக்குள் முடித்து விட வேண்டும்; அல்லது மரண தண்டனைக் குள்ளாகவேண்டும்' என்பது அரசனின் ஆக்ஞை. ஆகவே வெகு சுறுசுறுப்பாக வேலை நடந்தது. கடைசிக் கல்லைக் கட்டிடத்தில் பொருத்த வேண்டியதுதான் பாக்கி.

மேங்கூவின் மேற்பார்வையில் கல்லை உயர இழுத்துக்கொண்டு போனார்கள். அதை அந்த இடத்தில் இறக்கி துவாரத்தை அடைத்துவிட வேண்டும். ஆனால் சனியன், அந்தக் கடைசிக் கல் அந்தத் துவாரத்தில் விழமாட்டேனென 'மொக்கர்' பண்ணிற்று. மூன்று பக்கத்திலும் அந்தக் கட்டிடத்தோடு செவ்வையாக பொருந்திய அந்தக் கல் நாலாவது பக்கத்தில் மட்டும் பொருந்தாததற்கு என்ன காரணம்? அதை அறிவதற்காக மேங்கூ குனிந்து நோக்கினன். அடியில் அடுத்த கட்டிடத்தினின்று ஓர் கல் நீட்டிக்கொண்டிருந்தது. நீட்டிக் கொண்டிருந்த அந்தக் கல்லை எப்படியாவது உடைத்தெறியவேண்டும். உடைத்த வுடனே என்ன ஆகும்? இந்தப் பெரிய கல் தடாலென்று விழுந்துவிடும். உள்ளே நீட்டிக் கொண்டிருந்த கல்லை செதுக்கப்போனவன் அதோடு பலியாகவேண்டியதுதான். மேங்கூவின் மனது பதை பதைத்தது. அவனைச் சுற்றிலும் அத்தனை அடிமைகளும், பணியாட்களும் தங்கள் தங்கள் கால்களைக் கட்டிக் கொண்டு குந்தி யிருந்தனர். என்ன சொல்வாரென் மேங்கூ வாயையே பார்த்துக் கொண்டிருந்தனர். மேங்கூ ஓர் தடவை அந்த முகக்கடலை நோக்கினன். அவன் மனது மறுபடியும் சிந்தனையி லாழ்ந்தது. எகிப்து தேசத்தில் மனித உயிருக்கு விலை மிக மிக மலிவாய்த் தானிருந்தது. ஆனால் எந்த உயிரையும் பலி கேட்பதற்கு மேங்கூவுக்கு மனஞ் சகிக்கவில்லை. 'மனித உயிரென்ன அவ்வளவு சாதாரணமானதா?' என்று தன்னைத் தானே அவன் கேள்வி கேட்டுக்கொண்டான். சிறு வயதினின்று வேலைக்காரர்களை ஜட வஸ்துக்களென நடத்தி வந்த மேங்கூவுக்கு இப்போது மனித உயிர் மீது இவ்வளவு கரிசனம் வந்ததற்கு எதைக் காரணம் என்று குறிப்பிட முடியும்?

ஆனல் கட்டிடமோ இன்னும் இரண்டு நாட்களுக்குள் முடிந்தாக வேண்டும். எந்த அடிமையைக் குழியிலிறங்கச் சொல்வது? நீட்டிக் கொண்டிருந்த கல்லை யார் செதுக்குவது? அடுத்த இமைப்பில் ஆள் சாகவேண்டுமன்றோ? சாவதற்கு யார் முன்வருவார்கள்? 'சாவு' என்ன வாழைப் பழமா தின்பதற்கு. அதுவும் அடிமையாய் வாழத் துணிந்தவனில் யாராவது சாவுக்குத் துணிந்தவ னிருப்பானு? அப்படியே ஒரு அடிமையை வற்புறுத்தி இறங்கச் சொல்லலாமென்றல் அந்த அடிமையின் எஜமான் என்ன சொல்வானே? அரசன் என்ன சொல்வானே? குறிப்பிட்ட தினத்தில் கட்டிடம் முடிவு பெறுவிட்டால் மாண தண்டனை விதிக்கப்படும் என்ற தாக்கீதும் அவன் ஞாபகத்திற்கு வந்தது. கொலைக் களத்தில் சாவதைவிட வேலைக்களத்தில் சாவது நல்லதல்லவா? அரசனின் அவமதிப்புக்கு ஆளாகி உயிரை இழப்பதைவிட வாழ்க்கையில் வெற்றியோடு சாவது மேன்மையானதன்றோ! இவ்வாறு எண்ணினன் மேங்கூ. அப்போது இருட்டி விட்டது. வேலையாட்களை அவரவர் வீட்டுக்குப் போகுமாறு மேங்கூ உத்தர விட்டுவிட்டான்.

அன்று ஆகாயத்தில் சந்திரன் வெகு

ரமணீயமாய் உலவிக் கொண்டிருந்தான். பிரமிட்டின் உச்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த மெங்கூ சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டேயிருந்தான். கோபுரத்தின் அடியிலிருந்த கொட்டகைகளில் வேலைக் காரர்கள் அன்று 'குஷி'யாக இருந்தார்கள். சிலர் குளிர் சாய்ந்து கொண்டிருந்தனர்; சிலர் ஷோக்கான பாட்டுகளைப் பாடிக் கொண்டிருந்தனர். நாளைக்கோ நாளன்றைக்கோ அந்த வேலையாட்கள் அவரவர் கிராமங்களுக்குப் போய்விடலாமல்லவா? அதான் இந்தக் களியாட்டத்திற்குக் காரணம்.

வெல்வட்டு போலிருந்த நீல ஆகாயத்தில் சந்திரன் பவனி வருவதைக் கண்டு ஆயிரக் கணக்கான நட்சத்திரங்கள் சிரித்துக் கொண்டிருந்தன. மெங்கூ ஆகாயத்தை நோக்கிக் கொண்டிருந்தபோது யாரோ பின்னால் வருவதுபோல் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தான்........அவள்! அவளேதான். கோபுரத்தின்மீது ஏறி வந்துகொண்டிருந்தாள்! மெங்கூவின் இருதயம் அவனைத் தள்ளி எழுந்திருக்கச் செய்தது. ஓடிப்போய் அவளை இரண்டு கைகளாலும் வரவேற்றான். அந்த அழகான இரவில், துல்யமான நிலவில், கோபுரத்தின் உச்சாணியில் அவளைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொள்ளும்போது மெங்கூவுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தை என்னென்பது!

சந்தித்ததில் 'குட்டி'க்கு சந்தோஷம் தான். ஆனால் அவர் முகத்தில் அன்று ஏதோ கவலை குடிகொண்டிருப்பதாக அவளுக்குப் பட்டது. "என்ன? என்னமோபோலிருக்கேளே!" என்று பலதடவை அவள் கொஞ்சும் குரலில் கேட்டுப் பார்த்தாள். அவன் புன்சிரிப்புச் சிரித்துவிட்டு பேச்சை மாற்றிக்கொண்டேயிருந்தான். எவ்வளவு நாழிதான் அவனிடம் அவன் விஷயத்தை மறைக்கமுடியும்? கடைசியில் மெதுவாக அவளிடம் அந்தச் சனியனை கடைசிக் கல்லின் கதையைக் கூறிவிட்டான்.

அவள் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஒரு சொல்லைக்கூட அவள் விடவில்லை. கதையையெல்லாம் கேட்ட பின்பு எழுந்துசென்று அந்தக் கல்லிருந்த இடத்தையும் போய்ப் பார்த்துவிட்டு வந்தாள். "வேறு ஏதும் வழியில்லையா?" என்று அந்த அநுபவமற்ற பெண் கேட்டபோது மெங்கூவுக்கு பதில் கூறத் திராணியில்லை.

நாழியாகிவிட்டது, வெகு நேரம் காணப்படாமலிருந்தால் அரண்மனையில் அவள் மீது சந்தேகப்படுவார்கள். ஆகவே அவள் காதலனின் இருகரங்களையும் பற்றிக்கொண்டு மாறி மாறி முத்தங் கொடுத்தாள். "நீங்கள் கவலைப்படலாகாது. அவசரப்பட்டு எதையும் செய்யவுங் கூடாது. ராஜா ஒங்க மீது கோவிச்சக்கவே மாட்டார். சத்தியம், கடவுள் கிருபையிருக்கும்போது ஏன் வருந்தவேண்டும்?" என்று சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள்.

அவள் போனபிறகு மெங்கூ வெகு நேரம் அங்கு தாமதிக்கவில்லை. அந்த இரவில் பச்சை யாடைதரித்து வந்திருந்த அந்த பச்சிளம் பெண்ணை நினைத்துக் கொண்டே அவன் வீட்டுக்குத் திரும்பினான்.

நடு இராத்திரி நேரத்தில் அந்தக் கோபுரத்தின் அடிவாரத்தில் குடியிருந்த அடிமைகளெல்லாம் திடீரென விழித்துக் கொண்டனர். 'தடால்' என்று இடி விழுந்தது போன்று ஏதோ சத்தம் கேட்டதே, அது என்ன? நாலைந்து கிராமத்துக்கு அந்தச் சத்தம் கேட்டிருக்குமென்று அடிமைகள் பேசிக்கொண்டார்கள். கருக்கலோடு எழுந்து கோபுரத்தின் மீது சென்று வேலைக்காரர்கள் பார்த்தார்கள். என்ன ஆச்சர்யம்! அந்தப் பெரிய கல் வெகு சரியாக அந்தத் துவாரத்தை அடைத்துக் கொண்டிருந்தது.

பெரிய மேஸ்திரியான மெங்கூவுக்கு இந்த சந்தோஷச் செய்தியை யனுப்பினார்கள். அவன் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. என்ன எதிர்பாராத நிகழ்ச்சி! கோயில்களிலெல்லாம் அன்று பூஜைகளிட்டான். மாலை நேரமானதும் 'இந்த சுபச் செய்தியை அவளிடம் சொன்னால் அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள்?' என்று நினைத்துக் கொண்டான்.

அன்று மாலை வெகு நேரம் வரை அவன் கோபுரத்தின் மீது காத்துக் கொண்டிருந்தும் அவள் வரவில்லை. அன்று இரவு முழுவதும் அவன் கோபுரத்தின்மேலேயே தங்கிவிட்டான். ஏன் அவள் வரவில்லை என்று சுமார் லக்ஷம் தடவை அவன் மனம் கேட்டிருக்கும்.

பல இரவு அதே இடத்தில் அவன் காத்திருந்தும் 'குட்டி' வரவேயில்லை. கடைசியாக அரண்மனையினின்று ஓர் பாரம்பரைச்செய்தி அவன் காதில் விழுந்தது. அரண்மனையில் வேலை செய்து கொண்டிருந்த ஓர் பணிப்பெண்ணைக் காணோமென்று தேடிக்கொண்டிருந்தார்களாம். அப்போதுதான் மெங்கூவின் ஹிருதயத்தை ஏதோவொன்று தைத்தது. கடைசியாக அவளோடு பேசிக்கொண்டிருந்த போது அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவனது நினைவுக்கு வந்தது. ஒவ்வொரு சொல்லிலும் ஏராளமான அர்த்தத்தை வைத்தல்லவோ அன்று அவள் பேசியிருக்கவேண்டும்? 'ஐயோ ஐயோ' என்று அலறிக்கொண்டு மெங்கூ அந்தக் கல்லண்டை ஓடினான். தனது காதலியின் சமாதி மீது விழுந்து கதறினான்; கடைசியில் மூர்ச்சையாகி விட்டான்.

* * *

எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தக் கதை உயிரோடிருந்து வருகிறது. ஆலோசனை செய்தால் அந்த எகிப்தியப் பெண் கொண்ட காதலின் வலிமை தெரியவரும். காதலுக்கு அளவுண்டா? மரணத்தையும் கடந்ததல்லவா காதல்!

—("இந்தியன் ரெவியு" பத்திரிகையில் ஜான் ரஸ்ஸல் எழுதியது.)

உலகப் பிரசித்திப் பெற்ற
ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,

பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம்,

முதலிய வாடை கமழு கின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார்
அண்டு ஸன்,

புகையிலை கமிஷன் ஏஜண்டுகள், அண்டு மூக்குத்தூள் வியாபாரிகள்.
39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,
தபால் பெட்டி நெ. 189. சென்னை.
தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.



கச்சேரிகளில் கீர்த்தனைகள்

(ஈ. கிருஷ்ணய்யர் பி. ஏ., பி. எல்.,)

தற்காலம் பாட்டுக் கச்சேரிகளில் தியாகப் பிரும்மத்தின் கீர்த்தனைகளே அதிகமாக பாடப்பட்டு வருவது போற்றத் தகுந்த விஷயமே! ஆனால் வேறு பல பெரியார்களும் நமது சங்கீதக் களஞ்சியத்தை நிரப்பியிருக்கின்றார்களல்லவா? அவர்களுடைய உருப்படிகளும் ரஸிகர்களுக்குத் திருப்தி யளிப்பவை யாகும். தியாகராஜ கீர்த்தனைகளுடன், தீக்ஷிதர், ச்யாமா சாஸ்திரிகள் முதலியோருடைய உருப்படிகளும் அதிகம் கையாளப் படவேண்டும். இன்னும் பதங்களின் அருமை நன்கு வெளியாகவில்லை. க்ஷேத்திரீயர், சுப்பராமய்யர் முதலியோர் செய்து வைத்திருக்கும், ராக பாவம் ததும்பிய பதங்களை எவ்வளவுக் கெவ்வளவு அதிகம் கையாளுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு கச்சேரிகளின் ரஞ்சனையும் அதிகப்படும். இன்னும் புராதனமான புரந்தரதாசர் ஜயதேவர் முதலியோர் செய்து வைத்துள்ள உருப்படிகளும் பாடப்படவேண்டும். பாடும் உருப்படிகளின் அர்த்தம் பாடகனுக்கும், கேட்போருக்கும் தெரிந்தால், அந்த சங்கீதத்தின் அழகு அதிகமாகத் தென்படும். ஆனால் தமிழ் நாட்டில் பெரும்பான்மையான உருப்படிகள் தெலுங்கிலேயே பாடப்படுகின்றன. தெலுங்குக் கீர்த்தனைகளை தள்ளி விட முடியாது; தள்ளவும் அவசியமில்லை. தெலுங்குக் கீர்த்தனைகளைப்போல், அழகாய் அமைந்துள்ள கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக்கவி முதலியோர் எழுதிய உருப்படிகளையும் அதிகமாய்ப் பழக்கத்துக் கொண்டு வரவேண்டும். எளிதில் அர்த்தமாகக்கூடிய பாட்டுக்கள் இல்லாததால்தான் ஸாதாரணமாய்க் கச்சேரிகளை அனுபவிக்கும் ஜனங்கள் குறைவாகவும், தமிழ்ப் பாஷையில் பாட்டுக்கள் அமைந்துள்ள காலட்சேபங்களுக்கும், நாடகங்களுக்கும் போகும் ஜனங்கள் அதிகமாகவும் இருக்கிறார்கள் என்பது தெரியவரும். இன்னும் இதுகாறும், புராணக் கதைகளை ஒட்டி, பக்தியும், சிருங்காரமும் அடங்கிய பாட்டுகள் மாத்திரமே உலவிவருகின்றன அவைகளின் அவசியத்தைப் பற்றி யாரும் மறுக்க முடியாது. ஆனால் தற்காலத்தில் நம்முடைய நாட்டின் ஸந்தர்ப்பத்தையும் அவசியத்தையும் உத்தேசித்து, நமது ஜன்ம பூமியையே தெய்வமாகப் பாவித்துப் பாடப்பட்ட பாட்டுகளையும் நமது தேசசரித்திரத்திலுள்ள வீரச் செயல்களை விவரிக்கும் கருத்துள்ள பாட்டுக்களையும் உயரிய சங்கீத லட்சணத்துடன் தமிழ்ப் பாஷையில் வித்வான்கள் அமைப்பதோடு, அவைகளுக்கு முக்கிய ஸ்தானமும் கொடுக்க வேண்டும்.

நமது ஸங்கீதத்தில் பெருமை வாய்ந்ததும் விசேஷ லட்சணமுடையதுமாயிருப்பவை நமது ராகங்களேயாகும். எவ்வளவுக் கெவ்வளவு ராகங்களுக்கு இடங்கொடுக்கிறோமோ, எவ்வளவுக் கெவ்வளவு பாடும் உருப்படிகளில் ராகபாவம் நிறைந்திருக்கும்படி வற்புறுத்துகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நமது கச்சேரிகள் மேம்படும். தற்காலம் ஸ்வரப்ரஸ்தாரத்துக்கும், பக்க மேளத் தனி ஆவர்த்தனங்களுக்கும் எவ்வளவு ஸ்தானம் கொடுக்கிறோமோ அதை விட, உருப்படிகளின் முன் ராக ஆலாபனம் செய்வதற்கு அதிக சிரத்தை காட்டுவது அவசியமாகும். பல்லவி விஷயத்தில், அது சில காலமாக, மட்டுக்கடங்காது, விரஸமாகச் செய்யப்படுவதின் நிமித்தம் சில விடங்களில் பல்லவியையே முழுதும் கண்டிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதன் பயனாக, அதன் அவசியத்தை உணராது பாடகர்களும் இலேசாய், மிகச் சுருக்கமாய் வைத்துக்கொள்ளுகிறார்கள். சிலர், முக்கியமாக ஸ்திரீகள், பல்லவி பாடாமலேயே கச்சேரி செய்து விடுகிறார்கள். அது பொறிச் சூட்டிலிருந்து தீச்சூட்டில் பாய்ந்தது போலாகும். பாடும் பல்லவியை மிதமாகவும் ராக பாவம் நிறைந்திருப்பதாகவும் பாடினால் எல்லோரும் அனுபவிக்கக் கூடும். மனோதர்ம சங்கீதமான அப்பாகமும் நன்கு விருத்தி யடையும்.

மேற்குறித்த விஷயங்களை உத்தேசித்தே கச்சேரியில் பாடப்படும் பாட்டுகளின் விபரம் அடங்கிய குறிப்பு (புரோகிராம்—Programme) ஒன்று முன்னதாகவே தயாரித்து அதை அச்சிட்டு வழங்கவேண்டுவதின் பிரயோஜனம் தென்படும். அதைப்பற்றி அபிப்பிராய பேதம் இருக்கிறதும் தெரிந்த விஷயமே. முக்கியமாய் ஸங்கீதம் பாடுவதில், வித்வானுடைய மனோதர்மத்தையும் சாரீர சௌகரியத்தையும் கவனிக்கவேண்டி யிருப்பதால், அவ்வாறு முன்னமேயே புரோகிராம் போட்டு, கட்டுப்படுத்துவது உசிதமல்ல என்று

சொல்வாரும் உளர். ஆனால் சாரீர ஸௌகரியமும் மனோதர்மும் இல்லாத வேளைகளில், புரோகிராம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எந்தப் பாட்டும் நன்றாயிருக்கப் போவதில்லை. எனவே அது உண்மையானதோர் ஆட்சேபணை யாகாது. தவிர அவசியமானால் புரோகிராமைச் சமயோசிதம்போல் முன்னறிக்கை செய்து சிறிது மாற்றியுங் கொள்ளலாம். மேற்படி புரோகிராம் அச்சிட்டு வழங்குவதினால், பாடகர்கள் கச்சேரிக்கு முன்னதாகப் பாடப் போகும் பாட்டுகளில் கவனம் செலுத்த ஸாதகமாயிருப்பதோடு, ஸங்கீதம் கேட்கும் ஜனங்களுக்கும் கச்சேரியில் பாடப்படும் விஷயங்களை விபரமாய் அறிந்து அனுபவிப்பதற்கான ஓர் பேருதவியாயு மிருக்கிறது. ஏதாகிலும் அவ்வாறு புரோகிராம் போட்டுப் பாடி வரும் சில இடங்களில், பாடகர்களுக்கு இடஞ்சலிருப்பதாகவாவது, ஸங்கீதம் குறைவாக இருப்பதாகவாவது கண்டதில்லை. இன்னோரன்ன விஷயங்களை பாடகர்களும், ஸங்கீதப் பிரியர்களும் கவனித்து, திடமான மனதுடனும் உயரிய நோக்கங்களுடனும் கச்சேரிகளை நடத்துவார்களாகில், நமது ஸங்கீதம் அதிகம் மேன்மையடையு மென்பதற்கு ஐயமேயில்லை.

மகாத்மா காந்தி எழுதிய

நூல்கள்

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	 0	6	0
மகா தியாகம்	 0	4	0
அனுசக்தி யோகம்	 0	4	0
ஹிந்து தர்மம்	 0	2	0
கீதா போதனை	 0	2	0
உத்தம வாழ்க்கை	 0	2	0
ஆரோக்கிய வழி	 0	4	0
நீதி தர்மம்	 0	2	0
சத்திய சோதனை முதற் பாகம்	... 1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	 2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

தாஜ்மஹால்

(வத்திலக்குண்டு பி. எஸ். சங்கரன்)

"நேப்பிள்ஸ் நகரைப் பார்த்த பிறகு இறந்து போ" (See Naples and die) என்பது ஒரு பழைய வாக்கு. இதை "தாஜ்மஹாலைப் பார்த்து உயிர் பெறு" (See Taj and live) என்று மாற்றவேண்டு மென்பது என் பிரேரேபணை. பிரேரேபணையை யொட்டிப் பிரசங்கம் செய்ய வேண்டியது வழக்கமல்லவா?

உலகில் ஒரே ஒரு ஹிமயமலை; ஒரு ஷேக்ஸ்பியர்; ஒரு காளிதாஸன்; ஒரு கம்பன்; ஒரு பாரதியார்; ஒரே கடவுள்; ஒரே தாஜ்மஹால். இவைகளில் இரண்டாவது இருக்க முடியாது.

தாஜ்மஹாலின் உயர்ந்த சிகரத்தின் வனப்பைப் பார்ப்பதற்காகத் தலை நிமிர்ந்தேன். நிமிர்ந்த தலை கர்வத்தினால் நிமிர்ந்தபடியே நின்றது. "தாஜ்மஹால் என் தாய் நாட்டிலிருக்கிறது" என்று நினைக்கும்பொழுது நான் என் தலை குனிகிறேன்? "மன்னு மிமயமலை எங்கள் மலையே" என்று மார்தட்டிப் பாடினர் பாரதியார். இன்னும் எவ்வளவுதான் அடிமைப் பட்டுமே, தாஜ்மஹால் இந்தியாவின் அழிக்க முடியாத சொத்து.

"இந்திய சாம்ராஜ்யத்தை இழந்தால் நான் வருத்தப்படமாட்டேன். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை இங்கிலாந்து இழக்க முடியாது" என்றார் கார்லைல் என்ற ஆங்கில ஆசிரியர். கோஹினூர் வைரம் இந்தியாவை விட்டுப் போய் விட்டது. மயிலாசனத்தைப் பறிகொடுத்தோம். வரப்போகும் 'ரிசர்வ் பாங்கி' மூலம் பாக்கியிருக்கும் பணத்தையும் மூட்டை கட்டி யனுப்பப் போகிறோம். ஆனால் சில விஷயங்கள் இந்தியாவினின்றும் பறிக்கப்பட முடியாதவை. எந்த அன்னிய நாடாவது காளிதாசனைத் தன் கவியாக்கிக் கொள்ள முடியுமோ? இந்தியாவே அழிந்து போனாலும் உபநிடதங்கள் "இந்தியாவிற் பிறந்தவை" என்று அழைக்கப்படும். பாரதியார் "ஆங்கில தேசத்துக் கவி" என்றாக முடியாது. தாஜ்மஹாலை இந்தியாவிலிருந்து தூக்கிக்கொண்டு போய்விட முடியாது.

காடும், மலையும், கண்ணிற்கினிய காட்சிகளும் கவிஞர்களிடத்தில் பேசும். தாஜ்மஹால் என்னிடத்தும் உன்னிடத்துங் கூடப் பேசும். பேசிப் பார்! தாஜ்மஹாலின் வெள்ளை நிறம் சொல்கிற வார்த்தைகள் காதில் விழுகின்றனவா? "நிறங்களிலெல்லாம் நான் உயர்ந்தவன். கவிஞர்களின் பேனா முனையில் விளையாடும் கலைமகளின் உடுப்பும், ஆசனமும் வெள்ளை. கோஹினூர் வைரம் வெள்ளை. அன்னப் பறவை வெள்ளை. இந்தியாவின் ஒற்றுமைச் சின்னமாகிய 'காந்தி குல்லாய்' வெள்ளை. பாரதியாரின் மனம் வெள்ளை. தாஜ்மஹாலின் நிறம் வெள்ளை. அதன் கம்பீரத்தைப் பார்த்த உன் மனமும் வஞ்சகமற்று வெள்ளையாகும்" என்று சொல்கிறதா?

இன்னும் நன்றாக உற்றுக் கேள்! வெட்கத்தினாலும் துக்கத்தினாலும் அடைக்கப்பட்ட தொண்டையுடன் "உலகிலேயே சிறந்த தாஜ்மஹால் இருக்கும் நாடு சுதந்திர நாடாக இல்லாதது அவமானமாக இல்லையா?" என்று கேட்கிற குரல் உனது காதுகளில் விழவில்லை? இல்லையா! இல்லையானால் நீ செவிடன். உன் காதுகள் 'ரப்பரா'ல் செய்யப்பட்டிருக்க வேண்டும்; அல்லது உணர்ச்சியைக் கொடுக்கும் உனது நரம்புகளையும் அயல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்து விட்டார்களோ?

கண்ணாடியிலே முகம் தெரியும். தாஜ்மஹாலின் கம்பீரத்திலே, ஒளியிலே, நினைப்பிலே காதல் என்ற தெய்வீக வஸ்துவைக் காணலாம்.

கம்பன், காதல் வலிமையைக் கவிதையால் உணர்த்தினன்; ஷாஜஹான் கட்டிடத்தால் உணர்த்தினன்.

"வல்லவ னாக்கிய சித்திரம் போலும்
வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்
நல்ல தொழிலுணர்ந் தார்செய லென்றே
நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லையு மண்ணையும் பொன்னையுங்
காமர் மணிகள் சிலசில சேர்த்து" [கொண்டு

என்று பாரதியார் வர்ணித்தபோது தாஜ்மஹாலைத்தான் நினைத்துக் கொண்டார் போலும்!

மண்டையில் களிமண்

இனிஸ்பெக்டர் :— பீங்கானை எதனுல் செய் கிறுர்கள்?

மாணவன்:—ஓர் வகைக் களி மண்ணுல்.

இனி :—அந்தக் களிமண் எங்கே யிருக்கிறது?

மாணவன் :—(சில நிமிஷம் ஆலோசித்து) ஸார் —சொல்றேன் ஸார்—இதோ சொல்லிப் போட றேன் ஸார்—(தலையைத் தொட்டுக் கொண்டு) அது தலையிலே இருக்கு, வரமாட்டேங்குறது ஸார்.

பெண்டாட்டி தேவை

குப்புசாமி :—பத்துக் கல்யாணத்திலே ஒரு கல் யாணம்தான் நல்ல ஜதையாய் அமையறது ஸார்.

சுப்புசாமி :—ரொம்ப சரியாய்ச் சொன்னேள்! மூணு கல்யாணம் ஆகியும், எனக்கு ஒருத்தியும் பிடிக்கவில்லை. ஒங்க பெண் கமலத்தின் ஜாதகம் கைவசமிருக்கா?

* * *

முருவன்:—இரண்டு பொண்டாட்டி கட்டிக்கிட் டும் நமக்கு சொகமில்லை.

கந்தன்:—ஏண்டா அப்படி?

முருவன்:—முதல் பெண்டாட்டி ஓடிப் பூட்டா, கஷ்டமாச்சு. இரண்டாம் பெண்டாட்டி ஓடா திருக்கா, கஷ்டமாருக்குது.

தந்திக் கையெழுத்து

வக்கீல்: —பிராமிஸரி நோட்டு இல்லை யென்கிறீரே. அவன் கடன் கேட்டதற்கு ஏதாவது தஸ்தாவேஜி இருக்கிறதா?

கட்சிக்காரன் :—ஹூம் இருக்கு. இதோபாருங்கள். பணம் கடன் வேணும்னு கும்பகோணத்திலிருந்து அவன் அடிச்ச தந்தி இதோ இருக்கு. அதில் கையெழுத்துக்கூட இருக்கே.

* * * *

பிச்சைக்காரன்:—ஐயா காலணு!

அவர்:—சீ! முண்டமே! மூளை கொஞ்சம் வாங்கிக் கொள்ற துதானே. அதை மறந்து காசு கேக்கரயே!

பிச்சை:—உங்ககிட்டே இருக்கிறதைத்தானே நான் கேட்டு வாங்கிக்கலாம். இல்லாததைக் கேட்கலாமா?

ஸ்வதேசியை ஆதரியுங்கள்

கள்ளிக்கோட்டை விஜிடபில் சோப்ஒர்க்ஸில்

தயார் செய்த மேன்மையான வாசனையுள்ள

மலபார் { லிலிரோஸ் சோப் / சந்தன சோப் / லிம்டா சோப் (நீம்-வேப்) / டர்கிஷ்பாத் சோப் }

இந்த டாய்லட் சோப்புகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியதவசியம். ஆரோக்கியத்திற்கும் திரேக சவுக்கியத் திற்கும் இவையே முதன்மையானவை.

எமது முக்கியமான சலவை சோப்புகள் :—

மலபார் சோப் &

நீலம் (இண்டிகோ) சோப்

நே. 101. குஜராத் சோப்

எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

Props : சேட் நாக்ஜீ புருஷோத்தம் & கோ.

(of Sun Brand Umbrella Fame)

247, சைனுபஜார் ரோட், மதருஸ்.

(H. O, கள்ளிக்கோட்டை)

வறட்டு ஜம்பம்

(குறும்பன் எழுதியது)

நான் அவனைத் தொடர்ந்தேன். மூன்று மைல் தூரம் அவன் நடந்துதான் சென்றான். எனக்கு கால் வலி கண்டுவிட்டது. சைடோஜி சந்தின் ஓர் கோடிக்குப்போனதும் தனது அங்க வஸ்திரத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டு மார்பை முறைத்துப் பார்த்துக்கொண்டான். அங்கு நின்றிருந்த ஒரு ரிக்ஷாக்காரனைக் கூப்பிட்டு ஏதோ பேசினான். வண்டியில் ஏறி வெகு முறுக்காக, கம்பீரமாக உட்கார்ந்தான்.

அடடா! என்ன பார்வை! என்ன ஷோக்கு! நான் ஏமாந்தேன். இனி வண்டியைத் துரத்திக்கொண்டு ஓடுவது அநாகரிகம். தெருக்கோடியில் நின்று 'பே, பே' என்று விழிக்கவேண்டியதாயிற்று. சொன்னால் பொய்போலிருக்கும். ரிக்ஷா எட்டே எட்டு வீடுதான் தாண்டி ஓடிற்று. சத்தியம்! எட்டே வீடுதான்! ஒரு வீட்டு வாசலில் நின்றது. மைனர் இறங்கினார். பிரமாதமாக 'மணி பர்ஸை'த் திறந்து வண்டிக்காரனுக்கு ஏதோ சில்லரை தந்தார். பரமதிருப்தியோடு வண்டிக்காரன் திரும்பினான். யாரோ ஒருவர் அந்த வீட்டில் இருந்து "வாருங்கோ, வாருங்கோ" என்று வரவேற்கும் சப்தம் காதில் விழுந்தது. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'எட்டு வீடு தாண்டுவதற்கு வண்டி சவாரியா?' என்று எண்ண எண்ண, என் மூளை குடைய ஆரம்பித்தது. விஷயத்தை இன்னும் தீவிரமாகத் துப்பறிவதெனத் துணிந்தேன். விஷயம் பிறகு தெரிந்தது.

அந்த வீட்டில் அவன் 'தனது கல்யாணத்துக்குப் பெண் பார்ப்பதற்காகப்' போனானாம். ஓ! வண்டியில் வந்திறங்கும் மாப்பிள்ளைக்கன்றோ மதிப்பு? என்து நண்பன் தகல்பாஜி தாமோதரன் செலவுசெய்வதிலும் மிக்க சிக்கனம். மதிப்புப் பெறுவதிலோ அபாரம்! இந்தமாதிரி எத்தனை பேர்வழிகள் உலகில் இருக்கின்றனர் தெரியுமா? மாயவரம் வரையில் மூன்றும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்துவிட்டு, புதிய டிக்கட் வாங்கி, கும்பகோணத்தில் முதல் வகுப்பு வண்டியினின்று இறங்கும் 'இராஜீயத் தலைவர்கள்' இந்த தகல்பாஜியின் கோஷ்டிதானென்பதில் என்ன சந்தேகம்?

அவனுடைய தாயார் வைதவ்யமடைந்தவளாயினும் ரொம்பப் பேச்சுக்காரி. தாமோதரனின் வறட்டு ஜம்பமும் பேச்சும் அவள் தந்த மாதுரார்ஜிதம் என்றுதான் சொல்லவேண்டும். அவ்வளவு தொண தொணவென்று பேசுவாள். எங்கள் வீட்டிற்கு அவள் ஒரு தடவை வந்திருந்தாள். என் மனைவி தலைவாரிக்கொண்டிருந்த சமயம் அது. "அடியே அலமேலு! என்னடி இப்படி உன் மயிர் கொட்டறது! ஒங்க வீட்டிலே நல்ல தைலம் வாங்கித் தரதில்லையோ? அதான் மயிர் கொட்டறது. எனக்கு செறு வயசுலே எவ்வளவு மயிர் தெரியுமா? முழங்கால் வரையிலே தொங்கும். வாரி முடிவதற்கு முடியவே முடியாது. அப்படி வளர்ந்திருந்தது. இப்போது இப்படி ஆய்விட்டேன். இது தலைவிதி" என்று தனது வழுக்கை மண்டையின் முட்டாக்கை இழுத்துவிட்டுக்கொண்டாள். இது என்ன குறும்புத்தனம்? அடுத்த அறையிலிருந்து இத்தனையையும் நான் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். நிச்சயமாய்! நான் என் மனைவிக்குத் தைலம் வாங்கித் தரவில்லையென்று என்மீது ஓர் கோள் குற்றம் சாட்டினாள். பிறகு இவளது இளமைக் காலத்தைப்பற்றி ஒரு வர்ணனை செய்தாள். பிறகு அபசகுனமாகத் தனது வைதவ்யத்தோடு 'லெக்சரை' முடித்தாள். கல்லுப்போல நான் இந்த அறையில் இருக்கும்போது என் மனைவியிடம் வைதவ்ய வர்ணனை செய்ய இவள் யார்? எனக்குக் கோபம் ஏற்பட்டது. இந்தக் கிழத்தின் இளம்பருவத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்தே தீர்ப்பதென்று முடிவுசெய்து கொண்டேன். மூலைத் தெரு முறுக்குப்பாட்டி இவள் வயதினள். அவளிடம் சென்று தாமோதரன் தாயாரைப் பற்றி விசாரித்தேன். "அவளா? எனக்கு நன்றாய்த் தெரியுமே. பத்து வயதிலே அவளுக்கு அம்மை போட்டி அத்தனை தலைமயிரும் உதிர்ந்துபோயிருந்ததே. நாங்கள் அவளைச் 'சிவலிங்கம்' என்று கேலி செய்வது வழக்கமாச்சுதே. கல்யாணத்துக்குக்கூட சவுரி வைத்துத்தானே ஜடைபோட்டுக் கொண்டாள். கல்யாணமான பின்பு ஐந்து வருஷத்திற்குள் ஓர் பிள்ளையையும் பெற்று அகமுடையானையும் பறிகொடுத்து விட்டாளே" என்று பூர்வாசிரமக் கதையை அந்தப் பாட்டி கூறினாள். தனது தலை மயிரைப்பற்றிப் பிரமாதமாகப் பொய் சொல்லிக் கொள்வதில் இந்தக் கிழவிக்கு என்ன லாபமென்று எனக்குத் தோன்றவில்லை. புத்திரனாவது லாபத்தோடு வறட்டு ஜம்பம் காட்டுகின்றான். தாயார் யாதொரு லாபமுமின்றிப் பொய்யாக வறட்டு ஜம்பம் பேசுகின்றாள்.

தகல்பாஜி தாமோதரனின் வம்சத்தை என்னென்பது? அவனுடைய நாலு வயதுப் பிள்ளைக்கு எவ்வளவு ஜம்பம்! கிருபண சிகாமணியான தாமோதரன் கார்த்திகைக்குச் சீனு வெடி ஏதும் வாங்கித் தரவில்லையாம். அதை இந்த 'வாண்டு' தனது விளையாட்டுத் தோழர்களிடம் சொல்லிக் கொள்ளவில்லை. கார்த்திகை கழிந்த மறுநாட் காலையில் தாமோதரன் வீட்டு வாசலில் ஏராளமாக வெடித்த பட்டாசுகள் கிடந்தன. இது என்ன ஆச்சர்யமென்று துப்பறிந்தேன். முதல் நாளிலேயே ஊரில் சில வீட்டுப் பையன்கள் வெடித்திருப்பார்களல்லவா? அத்தனை குப்பைகளையும் ஒருவரு மறியாமல் பாட்டி, பிள்ளை, பேரன், மூவருமாக வாரிக்கொண்டு வந்து தங்கள் வீட்டு வாசலில் பரப்பிக்கொண்டார்களென்று தெரிந்தது. "போடா! நான் நூறு கட்டு பட்டாசு ராத்திரி முழுக்கக் கொளுத்தினேன் தெரியுமா?" என்று மூன்றிலை முளைக்காத அந்த வாண்டு பேசுகிறது. என்ன வறட்டு ஜம்பம்! இப்படி ஓர் 'ஜம்பக்குலம்' உலகில் இருப்பதை நானே கவனித்திருக்கிறேன். அந்த மாதிரி உங்களைச் சுற்றிலும் வறட்டு ஜம்பங்கள் பல இருக்கலாம், அல்லவா?

தமிழ்க் காதல்

(பாரதி தாஸன் பாடுகிறார்.)

கமலம் அடுக்கிய செவ்விதழால்—மலர்க்
காட்டினில் வண்டின் இசைவளத்தால்
கமழ்தரு தென்றல் சிலிர் சிலிர்ப்பால்—கருங்
கண்மலரால் முல்லை வெண்ணகைப்பால்
அமையும் அன்னங்களின் மென்னடையால்—மயில்
ஆட்டத்தினால் தளிர் ஊட்டத்தினால்
சமையும் ஒருத்தி—அப் பூஞ்சோலை—எனைத்
தன் வசம் ஆக்கிவிட்டாள் ஒரு நாள்

சோலை அணங்கொடு திண்ணையிலே—நான்
தோளினை ஊன்றி இருக்கையிலே
சேலை நிகர்த்த விழியுடையாள்—என்றன்
செந்தமிழ்ப் பத்தினி வந்து விட்டாள்
சோலை யெலாம் ஒளி வானமெலாம்—நல்ல
தோகையர் கூட்ட மெலாம் அளிக்கும்
கோல இன்பத்தை யென் உள்ளத்திலே—வந்து
கொட்டி விட்டாள் எனைத் தொட்டிழுத்தாள்.

சிங்க விரதம்

(சுத்தானந்த பாரதியார் பாடியது)

ராணா பிரதாப சிங்கன் ஓர் மகா வீரன். இதர மன்னர்களெல்லாம் மொகலாய மன்னனுக்கு அடிபணிந்து விட்டனர். ஆனால் சிங்கன் மட்டும் தனது சிறிய படையோடு மொகலாய சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போர்புரிந்து வந்தான். அவன் தனது படையினரோடு பவானி சந்நிதியில் வீர சபதம் செய்தது பின்வருமாறு:—

தலைமுடி வளர்ப்போம்! தரையினிற் படுப்போம்!
தாய்மனங் குளிர்ந்திடத் தவிப்போம்!
மலைகளிற் றிரிவோம்! வறுமையை யணிவோம்!
மண்மக ளளித்ததை மடுப்போம்!
விலைச்செய லொழிப்போம்! வீரமே விளைப்போம்!
வேண்டிய விருப்பினை முடிப்போம்!
நிலையற மோங்க நெருப் பெழ வுழைப்போம்!
நீலி ஓம் காளி நின் றுணையே!

வஞ்சரின் வஞ்ச வலைகளுக் கஞ்சோம்!
மாயையின் மயக்கினுக் கஞ்சோம்!
நஞ் சொழு கெஃகு நலிக்கினு மஞ்சோம்!
நமனெறி பாசத்திற் கஞ்சோம்!
துஞ்சினும் மறக்கோம் பிறந்தறந் துணிவோம்!
தோற்கினுந் தொண்டினிற் சோரோம்!
நெஞ்சினிற் சக்தி நெருப்புள தன்னை!
நிறைதரு வெற்றி நல் குகவே!

சோப்புத் தொழில்

இந்தியாவில் சுதேசி சோப்புத் தொழில் விருத்தியடைவதைக் கண்டு அந்நிய வர்த்தகர்கள் வயிற்றெரிச்சல் கொண்டுவிட்டார்கள் போலிருக்கிறது. ஜப்பானிலிருந்தும், இங்கிலாந்தினின்றும் வெகு மலிவாக சோப்புகள் வந்திறங்கப் போவதாக ஓர் வதந்தி வியாபார ஸ்தலங்களில் உலவுகின்றது. இந்தியாவில் சோப்புத் தொழிலை ஓர் குடிசைத் தொழிலென்றே சொல்லலாம். எத்தனையோ ஏழைகள் அத் தொழிலில் பிழைக்கின்றனர். இந்த சுதேசித் தொழிலுக்கு ஆதரவு கொடுப்பதுதான் சர்க்காருடைய கடமையாகும்.

இந்தியாவில் சோப்புத் தயாரிப்பதற்கு இரண்டு சாமான்கள் அந்நிய நாட்டினின்று வரவேண்டியிருக்கிறது. ஒன்று காஸ்டிக் சோடா. இன்னொன்று வாசனைத் தைலம். இந்த இரண்டு சாமான்கள் மீதும் நூற்றுக்கு 30 வீதம் சர்க்கார் துறைமுக வரி வாங்கி வருகின்றார்கள். ஆனால் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் சோப்பின் மீது வரியோ நூற்றுக்கு 25 தான். பிரிட்டிஷ் அல்லாத இதர சோப்புகளின் மீதோ நூற்றுக்கு 35 துறைமுக வரி. சுதேசித் தொழிலுக்கு அனுகூலமாக காஸ்டிக் சோடா வாசனைத் தயிலம் இவைகளின் மீதுள்ள சுங்க வரியைக் குறைத்தாக வேண்டும். அல்லது அந்நிய சோப்புகளின் மீது வரியை 100க்கு 60வீதம் உயர்த்த வேண்டும்.

ஒரு இந்தியன் 100 மணங்கு நல்ல ஸோப்புத் தயாரிப்பதாக வைத்துக் கொள்வோம். அவனுக்குப் பின்வருமாறு செலவு ஆகின்றது.

85 மணங்கு எண்ணெய்	ரூ. 850
15 மணங்கு காஸ்டிக் சோடா	ரூ. 195
2 மணங்கு வாசனைத் தைலம்	ரூ. 1,815
பாக்கிங் சாமான்கள்	ரூ. 500
மொத்தம்	ரூ. 3,360

இதில் அவன் சர்க்காருக்குத் துறைமுக வரி தருவது எவ்வளவு தெரியுமா?

காஸ்டிக் சோடாவுக்குச் சுங்க வரி	ரூ. 60
வாசனைத் தைலத்தின் மீது	ரூ. 545
பாக்கிங் சாமான் மீது	ரூ. 150
ஆக மொத்தம்	ரூ. 755

3,360 ரூபாயில் 755 ரூபாயை சர்க்காருக்குத் தந்துவிட்டு அந்நிய நாட்டு சோப்புகளோடு போட்டியும் போட வேண்டுமென்றால் என்ன செய்வது? துரைத்தனம் என்ன வேணுமானாலும் செய்து கொள்ளட்டும். பொது ஜனங்கள் சுதேசிச் சோப்புகளையே வாங்குவதென்று தீர்மானம் செய்து கொண்டார்களானால், சுதேசியம் அழியாது.

பாலர் பகுதி

சாவுகாரும் தேவதையும்

("மார்க்கண்டேயன்" எழுதுவது)

மதுரையில் ஒரு சாவுகார் இருந்தான். அவனுடைய பெண்டாட்டி ரோம்பப் பொல்லாதவள். எச்சில் கையால் காக்கை ஓட்ட மாட்டாள். பிடி அரிசி கூடப் பிச்சை போடமாட்டாள். ஒரு நாள் அவர்கள் வீட்டு வாசலில் ஒரு பிச்சைக்காரன் வந்தான். மழையினால் நனைந்து அவன் உடல் நடுங்கிற்று. கந்தல் துணியே கட்டியிருந்ததால் அவனால் குளிரைத் தாங்க முடியவில்லை. "அம்மா! தாயே!" என்று எவ்வளவோ கத்திப் பார்த்தான். சாவுகார் மனைவி வெளியே வந்து அவன் தலையில் கழநீரைக் கோட்டி விரட்டி விட்டாள். பிச்சைக்காரன் வைது கோண்டே போய்விட்டான். கோஞ்ச தூரத்திலிருந்த ஓர் சக்கிலி வீட்டிற்குள் நுழைந்தான்.

சக்கிலி ரோம்ப நல்லவன். பிச்சைக்காரன்மீது பரிதாபப் பட்டான். "தாத்தா! சுடச்சுட கூழ் தர்ரேன்; இந்தத் துணியைப் போத்திக்குங்க" என்று உபசாரம் பண்ணினன். பிச்சைக்காரன் அன்றிரவு கூழ் குடித்து விட்டு, அந்த வீட்டிலேயே படுத்திருந்தான்.

சக்கிலி காலையில் எழுந்து பார்க்கும் போது அவன் வீடு இந்திரலோகம் மாதிரி இருந்தது. எங்கு பார்த்தாலும் துணிகள், சால்வைகள், பட்டுகள், சட்டைகள் இன்னும் என்னென்னவோ நிறைந்திருந்தன. அங்கிருந்த கடுதாசியில் "நான்தான் பரதேவதை; பிச்சைக்காரன் மாதிரி வந்தேன். உனது நல்ல குணத்துக்காக வரம் தந்தேன்" என்று எழுதியிருந்தது. சக்கிலியினுடைய தயாள குணத்திற்குத் தெய்வம் பரிசளித்தது.

மறு நாள் சக்கிலியன் வீட்டிற்குச் சாவுகார் ஒரு செருப்புச் செப்பனிட வந்திருந்தான். இந்தத் துணியேல்லாம் ஏது என்று கேட்டான். கள்ளங் கபடமில்லாமல் சக்கிலி எல்லாவற்றையும் சோல்லிவிட்டான். சாவுகாருக்குப் போறுமை போங்கிற்று. அதைவிட அவன் பெண்டாட்டிக்கும் ஏற்பட்டது. இன்னொரு தடவை அந்தப் பிச்சைக்காரன் தங்கள் வீட்டிற்கு வந்தால் ஏமாறுவதில்லை என்று தீர்மானித்தனர்.

சிலநாள் கழித்து அதே பிச்சைக்காரன் சாவுகார் வீட்டிற்கு வந்தான். அவனும் அவன் பெண்ஜாதியும் மகா உபசாரம் செய்ய ஆரம்பித்தனர். ஆனால் தேவதைக்கு இவர்கள் எண்ணம் தெரியாதா? அன்று நல்ல சாப்பாடு போட்டார்கள். பாயசம், வடை, ஜிலேபி எல்லாம் போட்டார்கள். நல்ல கட்டிலில் படுக்கை போட்டு பிச்சைக்காரனுக்குக் கால் பிடித்தார்கள்.

காலைப் பிடித்துக் கோண்டே சாவுகார் கேட்டான். "அம்மா பரதேவதை! சக்கிலிக்குத் தந்தாற்போல் எனக்கும் வரம் தரவேண்டும்" என்று வேண்டினன்.

"தந்தேன் போ! பெட்டியிலிருந்து எடுக்க எடுக்கக் குறையாது" என்று தேவதை வரம் தந்தது. சாவுகார் பெண்டாட்டி "நான் நன்றாய்ச் சமைத்தேனே எனக்கு ஒன்றும் இல்லையா" என்று கேட்டாள். தேவதை சிரித்துக் கோண்டே "சரி, இனி பாத்திரத்தில் குறையாது" என்று கூறிவிட்டு மறைந்து விட்டது. அன்றிரவு முழுவதும் சாவுகாரும் மனைவியும் தூங்கவே யில்லை.

மறு நாள் காலை சாவுகார் பெட்டியைத் திறந்து கையைவிட்டான். எல்லாம் ஒட்டடை. ஒட்டடை தெரியுமா? மூலை முடுக்குகளில் சில வீடுகளில் தோங்குமே அதுக்குத்தான் ஒட்டடை என்று பெயர். சாவுகார் எடுத்து எறிய எறிய பெட்டியில் அது குறையவே இல்லை. அவன் மனைவி அப்போது அரிசி கழுவப் போனாள். கோட்டக் கோட்டக் கழநீர் குறையவே இல்லை. கழநீர் வெள்ளமாக ஓட ஆரம்பித்தது. பேராசையின் பயன் இதுதான் என்று அப்போதுதான் அவர்களுக்குத் தெரிந்தது. அன்று முதல் ஒரு பிச்சைக்காரனையாவது அவர்கள் கேலி செய்ததே இல்லை; விரட்டியதும் இல்லை.

விகடத் துணுக்குகள்

புது மனைவி:—எனக்காகவா மீசையை எடுத்து விட்டீர்கள்? அதில் ரொம்ப நஷ்டமோ?

அவன்:—ஒன்றரை பணந்தான்.

* *

மனைவி:—வெற்றிலைக்கு பூ உண்டா?

கணவன்:—அஞ்சு பூ உண்டு.

மனைவி:—நிச்சயமாகவா?

கணவன்:—ஆம்; காம்பு, நரம்பு, கிழிப்பு, மடிப்பு, உறைப்பு.

* *

புருஷன்:—உனக்கு வீட்டு நிர்வாகத்தில் காரியதரிசி ஸ்தானம் வேண்டுமா? உப தலைவர் ஸ்தானமா? அல்லது தலைவர் ஸ்தானமா?

மனைவி:—எனக்கு அதெல்லாம் வேண்டாம். டிரஷரர் ஸ்தானமே வேண்டும்.

* *

மனைவி:—நான் பாடுகிறது உங்களுக்கு நன்றாயில்லையா? நான் பாடுகிற போதெல்லாம் ஏன் வாசலில் போய் நிற்கிறீர்கள்?

புருஷன்:—அக்கம்பக்கத்தவர் நான் உன்னை அடிக்கிறேன் என்று நினைத்துக் கொள்வார்களோ என்ற பயத்தினால்.

* *

மாமா:—அம்பி! 8ம் 4ம் எத்தனை?

மருமான்:—(யோசித்து விட்டு) 12 தானே!

மாமா:-பேஷ், சரியாச் சொன்னே. இந்தா 12 பப்பர்மிண்டு.

மருமான்:—அடடா, அப்பவே தெரிஞ்சிருந்தா இன்னும் அஞ்சு கூடச் சொல்லி யிருப்பேனே.

இந்தியன் இண்டஸ்ட்ரியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்.

16 மூர் தெருவு, ஜி. டி. மதராஸ்.

லாபகரமானநிச்சய வழியில் வயதுக்குத் தகுந்த ப்ரீமியத்துடன் சிறு தொகைகளுக்கு வைத்ய பரீக்ஷையில்லாமல் பாலிஸிகள் அளிக்கும் 'இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி' இது ஒன்றே. சாமானிய ஜனங்களுக்கு உண்மையான உபகாரம். முழு விவரங்களுக்கு

M. குருநாதய்ய,
காரியதரிசிக்கு எழுதவும்.



கொலம்பஸ்

புது உலகைக் கண்டுபிடித்த தீரன்

(சக்கரவர்த்தி ஸ்ரீநிவாசன் எழுதியது)

தளராத மனோதைரியம், சலியாத, இடைவிடாத முயற்சி, வைரமுடைய நெஞ்சு, எல்லையற்ற துன்பங்களையும் ஏற்கும் சகிப்புத்தன்மை இவையே காரியசித்திக்கான லட்சணங்கள். அஞ்சாநெஞ்சம் படைத்த உண்மை வீரன் தோல்வியை வெற்றிக்கு ஓர் படியாக உபயோகித்துக் கொள்கிறான்.

இப்படிப்பட்ட சுத்த வீரர்களில் கொலம்பஸ் ஒருவன். அலை வீசி நிற்கும் கடலைக் கடந்து, மனிதர் முன்பின் செல்லாத இடங்களுக்கெல்லாம் சென்று, புதிய புதிய தேசங்களைக் கண்டு பிடிப்பதென்பது சாமானியக் காரியமா? கரை மீதிருந்து கடலை நோக்கினாலே நமக்குக் கதி கலங்குகின்றது; உடல் சிலிர்க்கின்றது; உள்ளம் உடைகின்றது. ஆயினும் வீர உணர்ச்சியில் தோய்ந்து கிடந்த கொலம்பஸின் நெஞ்சம் இவற்றையெல்லாம் லட்சியம் செய்யவேயில்லை.

இத்தாலி தேசத்தின் வடகோடியிலுள்ள ஜினோவாவில் வீரன் கொலம்பஸ் பிறந்தான். பாலியத்திலேயே அவன் அசாத்திய தைரியசாலியாக விளங்கினான். கப்பல் கொள்ளைக் கூட்டத்தாரை எதிர்த்துப் போரிடுவான். வெனிஸ் நகரத்தினின்று வரும் விலையுயர்ந்த சாமான்களைக் கைப்பற்றுவதில் திரைத்தனத்துக்குப் பெரிதும் உதவுவான். ஒரு தடவை அவனுடைய கப்பல் கடலில் தீப்பிடித்துக் கொண்டது; உடனே அவன் என்ன செய்தான் தெரியுமா? அப்படியே நீரில் குதித்து, ஆறு மைல் தூரம் நீந்திக் கரை சேர்ந்தான்.

அட்லாண்டிக் மகா சமுத்திரத்துக்கப்பால் நிலப் பரப்பு இருப்பதாகவே அக்காலத்தில், ஐரோப்பாவில் ஒருவருக்கும் தெரியாது. ஆனால் கொலம்பஸ் மட்டும் இச்சமாசாரத்தை ஐஸ்லாண்டு தேசத்தில் ஒரு தடவை கேள்விப்பட்டிருந்தான். நூதனமாகச் செதுக்கப்பட்ட மரத் துண்டுகள், அபூர்வ மனிதர்களின் தேகங்கள் இவற்றைப்பற்றியெல்லாம் தாங்கள் கண்ட கதைகளைக் கப்பலோட்டிகள் சொல்ல அவன் கேட்டிருந்தான்.

இக்கதைகளிலிருந்து அந்தப் பக்கத்தில் அவசியமொரு பூமிப் பரப்பு இருந்தே தீரவேண்டுமென அவன் தீர்மானித்தான். இது சம்பந்தமான எவ்வளவோ படங்களையும், புத்தகங்களையும் படித்தான். இன்னும் நம்பிக்கை அதிகமாயிற்று. ஒரு கப்பலைப் பெற முடிவு செய்தான். இது விஷயத்தில் இங்கிலாந்து தேச அரசன் எவ்வித உதவியையும் செய்யத் தயாராயில்லை. கொலம்பஸின் வேண்டுகோளுக்குப் போர்ச்சுகல் தேசத் தரசன் செவிசாய்த்தான். மந்திரிகள் கொலம்பஸின் யோசனையைப் பரிகசித்தனர். கொலம்பஸை அதிருப்திப் படுத்தக்கூடாதென்றும், நாடு கண்டு பிடிக்க அவ்வப்பொழுது கப்பல் கூட்டங்களை அனுப்பி வரவேண்டுமென்றும், ஆனால் அவன் கோரும் வெகுமதியைக் கொடுக்கக் கூடாதென்றும் ஒரு தந்திரப் பாதிரி ராஜாவுக்கு யோசனை கூறினான்.

நாடு பிடிக்கப் புறப்பட்டுச் சென்ற முதல் போர்ச்சுகீஸ் கோஷ்டி, ஆழத்தைக் கடக்க முடியவில்லையெனத் திரும்பிவிட்டது. தான் ஏமாற்றப் பட்டது கண்டு கொலம்பஸ் ஆத்திரமடைந்து, போர்ச்சுகல் தேசத்தை விட்டு ஸ்பெயினுக்குக் காலால் நடந்து சென்றான்.

ராணி இஸபெல்லா அவனது கதையைக் கேட்டு, அவனை அதிக மரியாதையுடன் நடத்தினாள். மார்க்கோ போலோவால் வர்ணிக்கப்பட்ட இந்தியா, சைனா, ஜப்பான் முதலிய தேசங்களுக்குக் குறுக்கு வழி கண்டுபிடிப்பதாக அவன் வாக்களித்தான்; மூன்று சிறு கப்பல்கள் புறப்பட்டன. அவற்றில் ஒன்றிற்குத்தான் அடித்தட்டிருந்தது. கப்பலோட்டிகள் அவற்றை ஓட்டிச் செல்ல மறுத்தனர்; பிறகு சிறைகளிலிருந்த கைதிகள் சிலரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு கொலம்பஸ் புறப்பட்டான். 1492-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 3ந் தேதி 88 பேர்கள் புறப்பட்டனர்.

தரை மறைந்து, நடுக் கடலுக்குக் கப்பல் வந்ததும் அவர்களைப் பீதி பிடித்துக் கொண்டது. நாற்புறமும் ஒரே நீல நிறக் கடல்; பொங்கி, அலை வீசுகின்றது; மேலே நீல ஆகாயம்; வேறு துணைவர் யார்? இந்நிலையில் யாருக்குத்தான் அச்சமுண்டாகாது? குழந்தைகள் மாதிரி அவர்கள் விம்மி விம்மியழுதனர். ஆனால் கொலம்பஸ் என்னமோ கொஞ்சமும் தைரியத்தையிழக்கவில்லை; அவர்களை அவன் தேற்றினான்; ஏராளமான வெகுமதிகள் கொடுப்பதாக வாக்களித்தான். அன்றுடம் கடந்துள்ள தூரத்தை, அவன் அவர்களுக்கு அறிவிப்பதில்லை.

இன்னொரு சங்கட மேற்பட்டது. நடுவழியில், திக்குக் காட்டும் முள் 'மக்கர்' பண்ணிற்று. "ஐயோ! இனி என் செய்வது? எப்படி வழி கண்டுபிடிப்பது?" என்று கப்பலோட்டிகள் அலறினார்கள். கொலம்பஸும் என்னென்னமோ சமாதானம் சொன்னான். எதுவும் அவர்களுக்கு ஆறுதலளிக்கவில்லை; தரையைக் கண்ணால் காணாமல் கடல் மீது எத்

படம் பிடிக்கும் நேரம்: காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை (டெலிபோன் நெ. 3419)	**வருஷாந்திர அறிக்கை** (சில நாட்களுக்கு மாத்திரம்) 12 × 10 அளவுள்ள பெரிய போடோ. ஒன்று ரூ. 3-க்கு எங்கள் கம்பெனியில் படம் பிடித்து தரப்படும்.	**R. தாவன் ஸ்டுடியோ** எலக்டிரிக் போடோ ஆர்டிஸ்ட்ஸ், 55, ரெடன் பஜார் ரோடு, மதராஸ்.

தனை நாள் செல்வது? இதனிடையே பல சங்கடங்களில் கப்பல்கள் அகப்பட்டுக் கொண்டன. கஷ்டப்பட்டுக் கொலம்பஸ் அவற்றைத் தப்புவித்தான். உடனே அவர்களுக்குத் துணையாகப் புயல் அடித்தது. ஆனால் புயல் அப்படியே யிருக்குமானால் எப்படித் திரும்புவது என்று எண்ணிக் கப்பலோட்டிகள் பயந்தனர். கடைசியில் அவர்கள் பகிரங்கமாகக் கிளர்ச்சி செய்தனர். ஒரு பைத்தியக்காரனைப் பின்பற்றித் தாங்கள் ஏமாந்ததாக அவர்கள் வருந்தினர். கொலம்பஸைத் தூக்கிக் கடலில் போட்டுவிட்டு, ஊருக்குத் திரும்பி, அவன் தவறி விழுந்து விட்டதாகச் சொல்லிவிடலாமெனவும் உத்தேசித்தனர். ஆனால், கொலம்பஸோ அத்தனை பேர்களுக்கும் ஜவாப் சொல்லக் கூடியவன். பேராசைக்காரர்களுக்குப் பணத்தை அள்ளிக்கொடுப்பதாகச் சொல்லித் தேற்றியும், கோழைகளைத் தண்டிப்பதாகப் பயமுறுத்தியும் அவன் சமாளித்துக் கொண்டான்.

நாட்டை விட்டு இரண்டு மாதங்களாயின. 2,700 மைல்கள் பிரயாணம் செய்திருந்ததைக் கொலம்பஸ் கண்டான். ஜப்பானுக்கு வெகு தூரத்தில் தாங்கள் இருப்பதாக யூகித்தான். வடக்கே வெகு தூரம் சென்று விட்டதாகக் கருதி, கப்பல்களைத் தெற்குப் பக்கம் திருப்பினான்.

ஒருநாள் காலையில் அபூர்வ சேதுக்கு வேலை செய்யப்பட்டிருந்த ஒரு மரத் துண்டும், மறுநாள் பழங்களுடன்கூடிய ஒரு செடியின் கிளையும், இன்னொரு நாள் ஒரு பட்சிக் கூட்டுடன் கூடிய ஒரு மரக்கிளையும் தென்பட்டன. அருகில் கரை யிருப்பதை இவை உணர்த்தின. வானத்தில் ஒரு வெளிச்சமும் தோன்றியது. பொழுது விடிந்ததும் எல்லோரும் கரையைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். இப்படியாகப் புதிய உலகம் கண்டு பிடிக்கப்பட்டது!

அது மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்று. எங்கும் ஒரே பசும்புல் தரை; நல்ல வெயில்; பல அருவிகள்; அந்தச் சமயத்தில்தான் கப்பலோட்டிகள் கொலம்பஸைத் தேவ தூதனைக் கருதினர். கப்பல்கள்மீது ஸ்பெயின் தேசம் கொடி கம்பீரமாகப் பறந்தன. கொலம்பஸ் பூமியை முத்தமிட்டு வணங்கினான். அந்தத் தீவுக்கு ஸான் ஸால்வடார் என்று பெயரிட்டான்.

அமெரிக்காக்கு அருகிலிருப்பது அவனுக்குத் தெரியவில்லை. ஜப்பானுக்கு வெகு தூரத்திலிருப்பதாக எண்ணினான். கிழ்ப்பிரதேச மகிமையின் சின்னங்கள் அவனுக்குத் தென்படவில்லை. அங்கு நிர்வாணமாகக் கிடந்த ஜாதியினரை அவன் 'இந்தியர்' என அழைத்தான். அமெரிக்காவில் இன்றுள்ள 'சிகப்பிந்தியஜாதி' கொலம்பஸ் தந்த தப்புப் பெயரோடு இன்றைக்கும் கூப்பிடப்படுகிறது.

எட்டு மாதங்களுக்குப் பிறகு தாய்நாடு திரும்பிய இந்த வீரனை ஐரோப்பா புகழ்ந்து, கொண்டாடியது. சில தினங்களுக்குப் பிறகு கொலம்பஸ் மீண்டும் மேற்குத் திக்கு நோக்கிச் சென்று அநேக தங்கச் சுரங்கங்களையும், அநேக புதிய நாடுகளையும் கண்டு பிடித்தான். நாடு தேடுவதே அவன் பித்தமாய் விட்டது.

ஸ்பெயின் தேசத்தினர் திரள்திரளாக இவ்விடங்களுக்குச் சென்று சுதேசிகளை அடிமைகளாக்கி, விற்று, வியாபாரஞ் செய்ய ஆரம்பித்தனர். கொலம்பஸ் இதை எதிர்த்தான். ஆனால் ஸ்பெயின் தேச அரசனால் ஹைடியின் கவர்னராக அனுப்பப்பட்ட பொபாடிலா என்ற போக்கிரிப் பயல் கொலம்பஸைக் கைதுசெய்து, பறவை போல் அடைத்துக் கப்பலிலேற்றி ஸ்பெயினுக்கு அனுப்பினான். கப்பல் தலைவன் கொலம்பஸின் விலங்குகளைக் கழற்றிவிடுவதாகக் கூறினான்; ஆனால் அரசன் உத்தரவிடாமல் அவை கழற்றப்படக் கூடாது என்றான் கொலம்பஸ். ஸ்பெயினை யடைந்ததும், அவனுக்கு நேரிட்ட கொடுமைக்காக அரசனும், குடிகளும் ஒருமிக்க வருந்தினர்; பரிகாரமும் தேடினர்; ஆனால் கொலம்பஸ் தன் வாழ்வில் நடந்த இந்த சோக சம்பவத்தை மட்டும் உயிருள்ளளவும் மறக்கவில்லை. தனக்குக் கிடைத்த பொதுமக்களின் சன்மானம் அதுதான் என்று சொல்லி அவன் தனக்கிடப்பட்ட விலங்குகளை அப்படியே வைத்திருந்தான். அவன் அமெரிக்காவைக் கண்டு பிடித்த அதிசயத்தை ஜனங்கள் அவன் மாண்ட பிறகே உணர்ந்தனர்.

அவனை ஆதரித்துவந்த ராணி இஸபெல்லா இறந்ததும், அவனுக்குக் கஷ்டங்கள் அதிகமாயின. எவ்வளவோ துன்பங்களை அனுபவித்துவிட்டு, எல்லோராலும் புறக்கணிக்கப் பட்டு, தரித்திரத்திலாழ்ந்து அவதிப்பட்டுவிட்டு 1506-ம் வருஷத்தில் அவன் ஆவி துறந்தான்.

உலக வீரர்களின் சரித்திரத்தில் வீரன் கொலம்பஸின் முடிவு மிகவும் பரிதாபகரமான தாகும். பிச்சைக்காரனாக வாழ்ந்து, பிச்சைக்காரனாகவே உயிர்விட்டான் கொலம்பஸ். அக்காலத்தில் அவனை இகழ்ந்தவர் பலர்; ஏசினவர் அநேகர்; ஆனால் இன்று, கொலம்பஸ் கண்டுபிடித்த அமெரிக்கா கோடீச்வரர் கூடியுள்ள நாடாக இருக்கிறது. கஷ்டம் ஒருவனுக்கு; இன்பம் பல பேருக்கும். பணி செய்வது தான் வீரனின் கடன் என்பதைக் கொலம்பஸ் சரிதையே அறிவுறுத்தும்.

ராம் மோஹனுடைய

வட இந்தியா யாத்ரா ஸ்பெஷல்

(பத்தாவது யாத்ரை)

1934-ம் வருஷம் பிப்ரவரிமீ முதல் வாரத்தில்

சென்னையைவிட்டுப் புறப்படும்.

சரியான தேதி பின்னல் குறிக்கப்படும்.

கீழ்க்கண்ட இடங்களுக்குப் போகும்.

துங்கபத்ரை (மந்த்ராலயம்), பண்டராபுரம், பப்பாய் நாஸிக் (பஞ்சவடி த்ரயம்பகம்), பரோச், நர்மதை, பரோடா, அஹமதாபாத் (ஸபர்மதி), ஸித்தபூர் (மாத்ருகயா - ஸரஸ்வதி), அபு (மவுண்ட் அபு), அஜ்மீர் (புஷ்கரம்), ஜயபூர், ஆக்ரா, மதுரா (பிருந்தாவனம், கோகுலம், கோவர்தனம்), டெல்லி குருக்ஷேத்திரம், ஹரித்வார், (ரிஷிகேஸ), லக்னோ (லக்ஷ்மணபுரம்), அயோத்யா (நந்திக்ராமம்), பிரயாகை (த்ருவேணி), அலஹாபாத், ஸ்ரீகாசி, கயா, கல்கத்தா, பூரி (ஜகந்நாதம்), ஸிம்ஹாசலம், ராஜமஹேந்திரி (கோதாவரி), பெஜவாடா (கிருஷ்ணா).

மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள்:—

மூன்றாவது வகுப்பு ரூ. 90

இரண்டாவது வகுப்பு „ 225

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,

21, செகண்டு லேன் பீச்சு, மதராஸ்,

சுறுசுறுப்பு ஜப்பான்

ஆறு கோடி பேர்தான் ஜப்பானைச் சேர்ந்தவர்கள். ஆனால் இந்த ஆறு கோடி பேர்களும் அறுபது கோடி மக்களின் வேலையை இன்று செய்து வருகின்றனர். 'காற்று நுழையாத இடம் இல்லை' என்பதுபோல் ஜப்பான் சாமான் நுழையாத தேசமில்லையென்று. சொல்லி விடலாம். ஜெர்மனி, ஆஸ்திரேலியா முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பான் சரக்குகள் விற்பனையாகின்றன. 'கொல்லன் தெருவில் ஊசி விற்பதுண்டா?' என்ற பழமொழியையே பொய்யாக அடித்து விட்டது இந்த ஜப்பான். ஏனெனில் தொழிற் சாலைகள் நிறைந்த நாடுகளிலேயும் தங்கள் சாமான்களை ஜப்பானியர் இன்றைக்கு விற்று வருகின்றார்களன்றோ!

இவ்வளவுக்கும் காரணம் ஜப்பானியரின் சுறு சுறுப்புத்தான். 1853-ம் வருஷத்தில் அமெரிக்காவினின்று முதன் முதலில் சாமான்கள் ஜப்பானில் வந்து இறங்குவதைப் பார்த்த போது ஜப்பானியருக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டதாம். அந்நிய வர்த்தகருக்கு இடங் கொடுப்பதாவென்று ஆத்திரம் ஊறிற்றாம். அவ்வளவுதான்! 1889-ல் அரசாங்கத்தைத் திருத்தி அமைத்துக் கொண்டார்கள். ஜாதிப் பிரிவினை, தீண்டாமை முதலிய சமூகச் சனியன்களைத் தொலைத்துக் கொண்டார்கள். இராணுவத்தைப் பலமாக்கிக் கொண்டார்கள்.

1871-ஸு முதல் பத்திரிகை பிரசுரமாயிற்று.

1872-ஸு தந்தி ஆபீசுகள் வைக்கப்பட்டன.

1873 ஸு பாங்குகளும் கரென்சியும் தோன்றின.

1875-ஸு தீக்குச்சித் தொழிற் சாலை ஆரம்பிக்கப் பட்டது.

1876-ஸு முதன் முதலில் ரயில் பாதை போடப் பட்டது.

1881-ஸு எலெக்டிரிஸிடி வந்தது.

1890-ஸு டெலிபோன்கள் ஏற்படுத்தப்பட்டன.

1900-ஸுல் தான் முதன் முதலில் மோட்டார் வண்டியோடிற்று. அன்றைய தினத்திலின்று இன்றைக்குள் ஜப்பானுடைய முன்னேற்றம் சண்டமாருதத்தைவிடக் கடுவேகமாக இருந்திருக்கிறது. மனிதன் உபயோகிக்கும் எல்லாச் சாமான்களும் இன்று ஜப்பானில் குறைந்த விலைகளில் தயார் செய்யப்படுகின்றன. ஆச்சரியம்! ஜப்பானில் தமிழ் அச்சுக்கோத்து அடிக்கின்ற அச்சாபீஸ்கூட ஒன்று இருக்கிறதாம்!

இவ்வளவு சுறு சுறுப்புக்கும் காரணம் படிப்பு. ஆறு வருஷ காலம் எல்லாக் குழந்தையும் பள்ளிக்கூடத்தில் படித்தே தீர வேண்டுமென, கட்டாயச் சட்டம் ஜப்பானில் இருக்கிறது. இன்றைக்கு 25 லட்சம் மாணவர்கள் ஜப்பானில் இருக்கின்றனர். இராணுவத்தைப் பற்றியோ, கப்பற் படையைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். வல்லரசுகளோடு மார் தட்டி நிற்கும் படியான அத்தனை ஆண்மை ஜப்பானுக்கு வந்து விட்டது. இந்த ஆச்சரியமான தேசத்தின் விர் விர் என்ற முன்னேற்றத்தைக்கண்டு எல்லாத் தேசத்தினரும் மூக்கில் கைவைக்க வேண்டியதாகிவிட்டது. எல்லாம் உழைப்பின் பயன்! தேச பக்தியின் பயன்.

கந்தைத் துணி கம்பிளியாகிறது

ஓர் வியாபார இரகசியம்

மக்கிப்போன கந்தைத் துணிகள், நைந்து போன பழஞ் சட்டைகள், கிழிந்து போன மேஜோடுகள், மடித்துப்போன பஞ்சு, நார், கூளம் இந்த வஸ்துக்களெல்லாம் திரண்டு வேறு உருவத்தைப் பெற்றுக் கடைகளில் வந்து வெகு அழகாக மினுக்குகின்றன. ஜனங்களும் 'புத்தப் புதிசு' என்று நினைத்து அவைகளை வாங்குகின்றார்கள். இந்த வியாபாரத்தின் இரகசியம் இப்போது பகிரங்கமாகியிருக்கிறது.

1860-ம் வருஷத்திலே பெஞ்சமின் லா என்ற ஓர் ஆங்கிலேயன் இரகசியமாக ஓர் தொழிலை ஆரம்பித்தான். குப்பைகளில் பொறுக்கப் பட்ட கந்தைத் துணிகளை, பஞ்சு, கம்பிளி நூல் முதலியவைகளோடு சேர்த்து, வில்லினால் 'கொட்டி', பிறகு நூலாக்கி, கம்பிளி ரூபத்தில் நெய்து புதிய ஆடைகளென்று விற்க ஆரம்பித்தானாம். அவனுடைய இரகஸ்யத் தொழில் இன்று வெகு மும்முரமாகி விட்டது. சுமார் 906 இயந்திரங்கள் இந்தக் கந்தையடிக்கும் தொழிலுக்கு உபயோகப்பட்டு வருகின்றன. 'உல்லன்' துணி என்று பிறநாடுகளில் விற்கப்படும் இந்தச் சரக்குகளுக்கு வர்த்தகர்களின் பரிபாஷையில் 'ஷாதி' துணி என்று வழங்கி வருகிறது.

இந்த 'உல்லன்' சரக்குகள் இங்கிலாந்தினின்று ஏராளமாக இந்தியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 'புத்தப் புதிசு! என்ன மலிவு!' என்று பேசிக்கொண்டு ஜனங்கள் வாங்கியே தீருகின்றார்கள். இந்தச் சரக்கு எப்படிக் கிராக்கியாயிருக்க முடியும்? பஞ்சு வாங்குவதாயிருந்தால் நிறைய விலை கொடுத்து வாங்கவேண்டும்; கம்பிளி நூல் வேண்டுமானால் ஏராளமாக ஆட்டுப்பண்ணைகள் வைக்கவேண்டும். உலகில் கந்தைத்துணி எப்போதும் கிடைக்கும்; எங்கும் கிடைக்கும்: பொறுக்கி 'ஸப்ளை' செய்ய நிறைய ஏழைகளும் உண்டு. அற்பமான விலைக்கு மூலப் பொருளை வாங்கிய 'ஷாதி' தொழிற்சாலைக்காரர்கள் தங்

கள் சரக்குகளை, சுத்தக் கம்பிளியை விட மலிவாக விற்பதற்கு வேறென்ன வேண்டும்?

ஆனால் நமது நாட்டிலோ காஷ்மீர தேசத்தில் கம்பிளி ஆடுகளை வளர்த்து, ரோமங்களைச் சேகரித்து, நேர்த்தியான கம்பிளிகளையும் சால்வைகளையும் தயார் செய்கிறார்கள். இந்த சுத்தமான நமது கம்பிளியோடு, குப்பைத் தொட்டி 'ஷாதி' உல்லன் போட்டி போடுகிறது. விலையைக் கண்டு ஜனங்கள் ஏமாந்து போகிறார்கள். குளிருக்குக் காஷ்மீரக் கம்பளி நல்லதா, குப்பைத் தொட்டிப் பஞ்சு நல்லதாவென்று விவரிக்க வேண்டியதில்லை. எத்தனை பேர்களின் உடலை இந்த இமிடேஷன் 'உல்லன்' துணி இன்றைக்கு மூடிக் கொண்டிருக்கிறதோ, யாரால் சொல்ல முடியும்?

மாப்பிள்ளை விலை

"விலை வாசிகள் எல்லாச் சாமான்களுக்கும் குறையுமென்று சொல்வதற்கில்லை. சில விலைகளைச் சட்டம் நிர்ணயிக்கிறது. சில விலைகள் வழக்கம் காரணமாகவும் ஜனங்களின் மனோபாவம் காரணமாகவும் அப்படியே நிலைத்து நிற்கின்றன. வாங்குகிறவர்களுக்கும் விற்பவர்களுக்கும் பரபரப்பில்லாத, காரணத்தினால் சில விலைகள் அப்படியே யிருக்கின்றன; விலை பொருள்களின் விலை அடியோடு விழுந்துபோயிருந்த போதிலும் அந்த அளவுக்கு, விவசாயக் கூலி குறைந்திருக்கிறதா? நில வரியோ முன்னைப் போல அப்படியே இருந்துகொண் டிருக்கின்றது. துணி விலை, மண்ணெண்ணெய் விலை, உப்பு விலை, தபால்கார்டு விலை — ஏன் மாப்பிள்ளைகளின் விலை கூட அப்படியேதான் இருக்கிறது; குறையவில்லை" யென்று வெகு அழகாக ஒருவர் ஓர் ஆராய்ச்சி எழுதியிருக்கின்றார். மாப்பிள்ளை மார்க்கட் நிலவரத்தை, 'தை' பிறப்பதற்கு முன்னடியே கண்டுபிடித்த இவர் கைகாரராயிருக்கவேண்டுமன்றோ!

காந்திஜி வருகிறார்

கதரை அணியுங்கள்

தோல் ஷாப்புகள்

தொழிலாளருக்கு வேண்டுகோள்

இதனால் நமது சமூகத்தைச் சார்ந்த சென்னை இராஜதானி 26 ஜில்லாக்களிலும் வேலை செய்யும் தோல் ஷாப்புத் தொழிலாளர்களுக்கு மிக்க அக்கறையோடு தெரியப்படுத்திக் கொள்வதாவது:—

இச்சென்னை இராஜதானியிலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளையும், உயர் ஜாதி இந்துக்கள், தங்கள் இனத்தார்கள் சகல விதத்திலும் முன்னேற்றம் அடையும்படி அவரவர்களின் தொழில்களை உத்தேசித்து, பேக்டரி ஆக்டில் சேர்த்திருக்கிறார்கள். அதனால் அத்தொழிற்சாலைகளில் வேலை செய்யும் உயர்ஜாதி இந்துக்களுக்கு எத்தனையோ நன்மைகள் இருப்பது உண்மை. இதைப்போல் சென்னை இராஜதானியிலுள்ள எத்தனையோ தோல்ஷாப்புகளில் ஏறக்குறைய ஒரு லட்சம் நமது ஆதிதிராவிடர்கள் வேலை செய்துகொண்டு வந்தும், அநேகமாக தோல் ஷாப்புகள் மேற்படி ஆக்டில் இல்லாமையால், எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். நம் ஜாதி அபிமானமுள்ள நம் வாலிபச் சகோதரர்கள் முன் வந்து இதிலுள்ள கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் சமரசமாக எந்நாளும் தொழில் புரிய வேண்டுமென்றும், ராஜீய விஷயத்தில் இத்தொழிலாளர்களுக்குப் பலவிதமான நன்மைகளும் செய்ய வேண்டுமென்றும் உத்தேசித்து இச்சங்கத்தை செங்கற்பட்டு ஜில்லாத் தொழிலாளர் சங்கமென்று 1920-ம் வருஷத்தில் ஸ்தாபகம் செய்தார்கள். பிறகு சென்னை இராஜதானி தோல் பதனிடும் தொழிலாளர்சங்கமென்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இச்சங்கம் தோன்றியபிறகு தோல் ஷாப்புத் தொழிலாளர்களுக்கு அரசாங்கப் பாதுகாப்பின் மூலமாய்க் கொஞ்சம் நன்மை ஏற்பட்டிருப்பது தொழிலாளர்களுக்கு நன்றாய்த் தெரியும். தவிரவும், தோல் ஷாப்பு தொழிலாளர்களின் முன்னேற்றத்தைக் கருதி சைமன் கமிஷனிலும், லேபர் விட்லி கமிஷனிலும், ஓட்டுரிமை லோதியன் கமிட்டியிலும் நமது சங்கத்தார் அதிகப் பணம் செலவு செய்து, நம் மரபினராகிய ம-ா-ா-ஸ்ரீ ஜே சிவஷண்முகம் பிள்ளை, எம். ஏ., மதராஸ் கார்ப்பொரேஷன் கவுன்சிலர் அவர்களைக்கொண்டு தோல் ஷாப்பு விஷயமாக நம்மரபினர்களின் குறைகளைப்பற்றி நேரில் சாட்சியம் கூறியிருக்கிறார்கள். அதன் பலனாகவே அரசாங்கக் கமிஷனர்கள் தோல்ஷாப்புகளை நேரில் வந்து பார்வையிட்டு, நம்மவர்களுக்குச் செய்திருக்கும் சிபார்சுகள் உங்களுக்குத் தெரியும். தவிரவும் ஸ்ரீமான் எஸ்.எச். சிலேட்டர், சி. எம். ஜி., சி.ஐ.இ., ஐ.சி.எஸ். அவர்கள், இச்சென்னை இராஜதானியுலுள்ள தோல் ஷாப்புகளையும் பார்வையிட்டு இது விஷயமாக நன்மை செய்ய, சென்னை அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருக்கிறார். தோல்ஷாப்புத் தொழிலாளர்களுக்காகச் சகலவிதத்திலும் நன்மை செய்ய இந்த ஒரு சங்கந்தான் அரசாங்கத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் எல்லாத் தோல் ஷாப்புத் தொழிலாளர்களும் இதில் மெம்பராகச் சேரவேண்டியது அவர்கள் கடமை.

எ. எம். ஆரோக்கியசாமி பிள்ளை,
கௌரவக் காரியதரிசி.

பிரசிடேண்டு
ஜே. சிவஷண்முகம் பிள்ளை, எம். ஏ.
கார்ப்பொரேஷன் கவுன்சிலர்.

எம். சுந்தரமூர்த்தி பிள்ளை,
கௌரவப் பொக்கிஷதார்.

சங்கத்தின் ஆபீஸ்:—
வரதராஜப்பேட்டை,
கோடம்பாக்கம்.

மகாத்மா தென்னாடு விஜயம்.

ஹரிஜன முன்னேற்ற விழாவைக் கொண்டாட, அவ்வைபவத்தை உண்மையில் அனுபவிக்க ஓரே சாதனம்.

ஹரிஜன மகான்கள்

என்னும் அரிய சிறிய தமிழ்நூலை வாங்கிப் படிப்பதும் பிறர்க்கு விநியோகிப்பதுமே.

பிரதி ஒன்று விலை அணா மூன்று.

சுதந்தரச் சங்கு ஆபீஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி.

ஆறில் ஒரு பங்கு

கவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய சிறு கதை

[பூர்வ கதை ;—கதா நாயகனுக்கு மீனும்பாள் என்னும் பெண்ணிடம் காதல். அவளுக்கும் அவனிடம் காதல்தான். பெண்ணும், அவள் தந்தை ராவ் பகதூர் சுந்த ராஜுலு நாயுடுவும் தஞ்சை வாசிகள். கதா நாயகன் புரசைபாக்கத்தில் வசிப்பவன். அவன் வந்தேமாதர மார்க்கத்தில் பற்றுக்கொண்டதால் நாயுடு தமது மகளை அவனுக்கு மணம் செய்யும் எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டார். நீண்ட நாளாக மீனாளிடமிருந்து கடிதம் வாராததைப்பற்றிக் கதா நாயகன் வருந்துகிறான். ஒரு நாள் காதலி யிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. நாயனா தன்னை மன்னாரு என்ற ஒருவனுக்கு மணம் செய்ய முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும், தனது கடிதம் எழுதப்படும் அன்று தினமே ஓர் பச்சிலையைத் தின்று தனது ஆவியைத் துறக்கப் போவதாகவும் மீனாள் எழுதி விட்டாள். கடிதத்தைப் படித்ததும் கதா நாயகன் மூர்ச்சித்து விழுகிறான்.]

அத்தியாயம் 3.

மீனும்பாளுடைய மரண வோலை கிடைத்ததின் பிறகு இரண்டு வருஷங்கள் கழிந்து விட்டன. இதனிடையே எனக்கு நிகழ்ந்த அனுபவங்களை யெல்லாம் விஸ்தாரப்படுத்திக் கொண்டு போனால் பெரிய புராணமாக வளரும். சுருக்கமாகச் சொல்லுகிறேன். அந்த ஆருமையினால் வெளியேறிய நான் அப்படியே காஷாயம் தரித்துக் கொண்டு துறவியாக வடநாட்டிலே ஸஞ்சாரம் செய்துவந்தேன். "வந்தே மாதர" தர்மத்தை மட்டிலும் மறக்கவில்லை. ஆனால் என்னை சர்க்கார் அதிகாரிகள் பிடித்துச் சிறையிடும்படியான முயற்சிகளிலே நான் கலக்கவில்லை. ஜனங்களுக்குள் ஒற்றுமையும், பலமும் ஏற்படுத்தினால், ஸ்வதந்திரம் தானே சித்தியாகு மென்பது என்னுடைய கொள்கை. காரணத்தை விட்டுப் பயனைச் சீறுவதில் என் மனங் குவியவில்லை. அங்கங்கே சில சில பிரசாரங்கங்கள் செய்ததுண்டு. இதுபற்றிச் சில விடங்களில் என்னைப் போலீசார் தொடரத் தலைப்பட்டார்கள். இதனால் நான் ஜனங்களிடையே நன்றாகக் கலந்து நன்மைகள் செய்துகொண்டுபோக முடியாதபடி பல தடைகள் ஏற்பட்டன. ஆகவே எனது பிரசங்கங்களிலிருந்து எனது நோக்கத்திற்கு அனுகூலத்தினும் பிரதி கூலமே அதிகமாக விளையலாயிற்று. இதையுந் தவிர, எனது பிரசங்கங்களைக் கேட்டு ஜனங்கள் மிகவும் வியப்படைவதையும், மற்றவர்களைக் காட்டிலும் எனக்கு அதிக உபசாரங்கள் செய்வதையும் கண்டு, உள்ளத்திலே கர்வம் உண்டாகத் தலைப்பட்டது.

"இயற்கையின் குணங்களிலிருந்து செய்கைகள் பிறக்கின்றன. மூடன் 'நான் செய்கின்றேன்' என்று கருதுகின்றான்" என்ற பகவத் கீதை வாக்கியத்தை அடிக்கடி மனனஞ் செய்துகொண்டேன். இந்த வீண் கர்வம் நாளுக்கு நாள் மிகுதியடைந்து என்னை விழுங்கி, யாதொரு காரியத்திற்கும் பயன்படாமல் செய்துவிடுமோ என்ற அச்சம் உண்டாயிற்று. வெளிக்குத் தெரியாமல் எவருடைய மதிப்பையும், ஸன்மானத்தையும் எதிர்பார்க்காமல் சாதாரணத் தொண்டிழைப்பதற்கே என்னை மாதா வைத்திருக்கிறாளென்பதை அறிந்துகொண்டேன். எனவே, பிரசங்கக் கூட்டங்களில் சேர்வதை நிறுத்திவிட்டேன். சில தினங்களுக்கப்பால், எனக்குப் போலீஸ் சேவகர் செய்யும் உபசாரங்களும் நின்று போய்விட்டன. பாதசாரியாகவே பல இடங்களில் சுற்றிவிட்டு, பல பல தொழில்கள் செய்துகொண்டு லாகூர் நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அங்கே லாலா லஜபதி ராய் போன்ற பலரைப் பார்க்கவேண்டு மென்ற இச்சை ஜனித்தது. அவரைப் போய்க் கண்டதில், அவர் என்னிடம் நம்பிக்கை கொண்டவராகிக் கோசல நாட்டுப் பிரதேசங்களில் கொடிய பஞ்சம் பாவியிருக்கிறதென்றும், பஞ்சத்தில் கஷ்டப்படும் ஜனங்களுக்குச் சோறு துணி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் தாம் நிதிகள் சேர்த்து வருவதாகவும் பல வாலிபர்கள் தம்மிட மிருந்து திரவியங் கொண்டுபோய்ப் பஞ்சமுள்ள ஸ்தலங்களிலிருந்து உழைத்து வருவதாகவும் தெரிவித்துவிட்டு, "நீரும்போய் இவ்விஷயத்தில் வேலை செய்யக் கூடாதா?" என்று கேட்டார்.

ஆ! ராமச்சந்திரன் அரசு செலுத்திய நாடு! வால்மீகி முனிவர் புகழ்ந்துபோற்றிய நாடு! அங்கு ஜனங்கள் துணியும் சோறுமில்லாமல் பதினாயிரக் கணக்காகத் தவிக்கிறார்கள்! அவர்களுக்கு உதவி செய்யப் போவாயா என்று என்னைக் கேட்கவும் வேண்டுமா? அவர்களெல்லோரும் எனக்குத் தெய்வங்களல்லவா? அவர்களுக்கு வேண்டியன செய்ய முடியாவிட்டால் இந்தச் சதையுடம்பை எதன் பொருட்டாகச் சுமக்கிறேன்?—லாலாவிடம் அனுமதி பெற்றுக்கொண்டு போய்ச் சிறிது காலம் அந்தக் கடமையைச் செய்துகொண்டு வந்தேன். அங்கு கண்ட காட்சிகளைப் பற்றி எழுத வேண்டுமா? எழுதுகிறேன் கவனி. தேவலோகத்தைப் பற்றிக் கேள்வி யுற்றிருக்கிறாயா?

சரி. நரகத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறாயா? சரி. தேவலோகம் நரகலோகமாக மாறியிருந்தால் எப்படித் தோன்றுமோ அப்படித் தோன்றியது பகவான் ராமச்சந்திரன் ஆண்ட பூமி! நான் அங்கிருந்த கோரங்களையெல்லாம் உங்களிடம் எதற்காக விரித்துச் சொல்ல வேண்டும்? புண்ணிய பூமியைப் பற்றி இழிவுகள் சொல்வதினால் ஒரு வேளை சிறிது பாவமுண்டாகக் கூடும். அந்தப் பாவத்தைத் தவிர வேறென்ன பயன் கிடைக்கப் போகிறது? உன்னால் எனது தாய் நாட்டிற்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? எழுந்திருந்து வா பார்ப்போம். எத்தனை நாள் உறங்கி இப்படி அழியப் போகிறீர்களோ! அட பாப ஜாதியே, பாப ஜாதியே,........இது நிற்க, ஓரிரண்டு மாதங்களுக் கப்பால், லாலா லஜபதிராய் எங்களுக்குக் கடித மெழுதி, இனி அந்த வேலை போதுமென்று கட்டளை பிறப்பித்து விட்டார்.

கோசல நாட்டுப் பிரதேசங்களில் பஞ்சத்தின் சம்பந்தமாக நான் வேலை செய்த சில மாதங்களில், ஏற்கனவே என் மனதில் நெடுங் காலமாக வேரூன்றியிருந்த ஒரு சிந்தனை பலங்கொண்டு வளரலாயிற்று. தணிந்த வகுப்பினரின் நன்மை தீமைகளிலே, நமது நாட்டில் உயர்ந்த வகுப்பினரென்று கூறப்படுவோர் எவ்வளவு தூரம் அசிரத்தையும், அன்னியத் தன்மையும் பாராட்டுகிறார்களென்பதை நோக்கு மிடத்து, எனது உள்ளத்தில் மிகுந்த தளர்ச்சி யுண்டாயிற்று. தென்னாட்டைப் போலவே வட நாட்டிலும் கடைசி வகுப்பினரென்பதாகச் சிலர் கருதப்படுகின்றனர். தென்னாட்டைப் போலவே வட நாட்டிலும் இந்த வகுப்பினர் பெரும்பாலும் விவசாயத் தொழிலையே செய்து கொண்டிருக்கிறார்கள். உழவுத் தொழிலுடைய இவர்கள் சாஸ்திரப்படி வைசியர்களாக வேண்டும். ஆனால் இவர்களிலே பலர் மாட்டிறைச்சி தின்பது முதலிய அனாசாரங்கள் வைத்துக் கொண்டிருப்பதால், ஹிந்து ஜாதி அவர்களைத் தாழ்வாகக் கருதுகின்றது. ஹிந்து நாகரிகத்திலே பசுமாடு மிகப் பிரதானமான வஸ்துக்களிலே ஒன்று. ஹிந்துக்களின் நாகரிகம் விவசாயத் தொழிலைப் பொறுத்து நிற்கின்றது. விவசாயத் தொழிலுக்குப் பசுவே ஜீவன். ஆதலால் ஹிந்துக்கள் புராதன கால முதலாகவே கோமாமிசத்தை வர்ஜனம் செய்துவிட்டார்கள். ஒரு சிறு பகுதி மட்டும் வர்ஜனம் செய்யாதிருப்பது கண்டு ஜாதிப் பொதுமை அப்பகுதியைத் தாழ்வாகக் கருதுகிறது. இது முற்றிலும் நியாயம். ஆனால் பஞ்சம், நோய் முதலிய பொதுப் பகைவருக்கு முன்பு நமது உயர்வு தாழ்வுகளை விரித்துக் கொண்டு நிற்பது மடமை. தாழ்ந்த ஜாதியாரை நாம் மிதமிஞ்சித் தாழ்த்தி விட்டோம். அதன் பயன்களை நாம் அனுபவிக்கிறோம்.

“ஹிருதய மறிந்திடச்
செய்திடுங் கர்மங்கள்
இகழ்ந்து பிரிந்து
போமோ?”——

‘முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்’. நாம் பள்ளர் பறையருக்குச் செய்ததையெல்லாம் நமக்கு அந்நிய நாடுகளில் பிறர் செய்கிறார்கள். நமது சிருங்கிரி சங்கராச்சாரியாரும், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளும், நெட்டால், திரான்ஸ்வால் தேசங்களுக்குப் போவார்களானால், ஊருக்கு வெளியே சேரிகளில் வாசம் செய்ய வேண்டும். சாதாரண மனிதர்கள் நடக்கும் ரஸ்தாக்களில் நடக்கக் கூடாது. பிரத்தியேகமாக, விலகி நடக்க வேண்டும். பல்லக்குகள், வண்டிகள், இவற்றைப் பற்றி யோசனையே வேண்டியதில்லை. சுருக்கம்:—நாம் நமக்குள்ளேயே ஒரு பகுதியாரை நீசர்களென்று பாவித்தோம். இப்போது நம்மெல்லோரையுமே உலகத்தார் மற்றெல்லா நாட்டினரைக் காட்டிலும் இழிந்த நீசர்களாகக் கருதுகிறார்கள். நம்முள் ஒரு வகுப்பினரை நாம் தீண்டாத வகுப்பினரென்று விலக்கினோம். இப்போது வேத மார்க்கஸ்தர் மஹமதியர் என்ற இரு பகுதி கொண்ட நமது ஹிந்து ஜாதி முழுவதையுமே உலகம் தீண்டாத ஜாதி யென்று கருதுகிறது. உலகத்தில் எல்லா ஜாதியாரிலும் வகுப்புகள் உண்டு. ஆனால் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியை துர்ப்பலப் படுத்தி விடுமானால், அதிலிருந்து நம்மைக் குறைவாக நடத்துதல் அன்னியர்களுக்கெளிதாகின்றது “ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.”

1200 வருஷங்களுக்கு முன்பு, வட நாட்டிலிருந்து மகமதியர்கள் பஞ்சாப் நாட்டில் பிரவேசித்தபோது, நம்மவர்களின் இமிசை பொறுக்க முடியாமல் வருந்திக் கொண்டிருந்த பள்ளர், பறையர் பேரிகை கொட்டி, மணிகள் அடித்துக்கொண்டு போய் எதிரிகளுக்கு நல்வரவு கூறி அவர்களுடன் கலந்து கொண்டதாக இதிஹாஸம் சொல்லுகின்றது. அப்பொழுது நமது ஜாதியைப் பிடித்த நோய் இன்னும் தீராமலிருக்கிறது. பஞ்சத்தில் பெரும்பாலும் பள், பறை வகுப்பினரே மடிந்து போகிறார்கள். இதைப் பற்றி மேற்குலத்தார்கள் தாம் சிரத்தை செலுத்த வேண்டிய அளவு செலுத்தாமலிருக்கின்றனர். எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயப் பாதிரிகள் பஞ்சம் பற்றிய ஜனங்களுக்குப் பலவித உதவிகள் செய்து, நூற்றுக் கணக்கான மனிதர்களையும், முக்கியமாகத் திக்கற்ற குழந்தைகளையும் கிறிஸ்து மதத்திலே சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஹிந்து ஜனங்களின் தொகை வருஷந்தோறும் அதி பயங்கரமாகக் குறைந்துகொண்டு வருகிறது. மடாதிபதிகளும் சந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக்கொண்டு ஆனந்தமடைந்து வருகின்றனர். அதர்மங்கள் வளர்ந்து வருகின்றன. ஹிந்து ஜனங்கள்! ஜனங்கள்!—நமது இரத்தம், நமது சதை, நமது எலும்பு, நமது உயிர்—ஹிந்துஸ்தானத்து ஜனங்கள் ஏனென்று கேட்பாரில்லாமல் பசிப் பிணியால் மாய்ந்து போகின்றனர்.

கோ மாமிசம் உண்ணுதபடி அவர்களைப் பரிசுத்தப் படுத்தி, அவர்களை நமது ஸமூகத்திலே சேர்த்து அவர்களுக்குக் கல்வியும், தர்மமும், தெய்வமும் கொடுத்து நாமே ஆதரிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களெல்லோரும் நமக்குப் பரிபூர்ண விரோதிகளாக மாறி விடுவார்கள். இந்த விஷயத்திலே எனது சிறிய சக்திக்கு இயன்ற வரை முயற்சிகள் செய்ய வேண்டுமென்ற அவா எனது உள்ளத்தில் வளரலாயிற்று. வங்கநாட்டில் அசுவினிகுமார தத்தர் என்ற தேசபக்தர் ஒருவர் இருப்பதாகவும், அவர் அந்தப் பிரதேசங்களில் ‘நாமசூத்திரர்’ (பெயர் மட்டில் சூத்திரர்) என்று கூறப்படும் பள்ளர்களை ஸமூஹ வரம்பினுள்ளே சேர்த்து உயர்வு படுத்த முயற்சிகள் செய்வதாகவும் கேள்விப் பட்டேன். அவரைப் பார்க்க ஆசை உண்டாயிற்று.

(தொடரும்)

ஒரே ஒரு உதாரணம்

(“ராஜாத்தி”யின் கடிதம்)

நேச ரங்கம்!

நல்ல வேளையாக ஞாபகமூட்டினாய். நான் வேறு என்னவோ எழுதக் கோடித்துக் கொண்டிருந்தேன். பெண்கள்மேல் சுமத்தப்படும் அபாண்டங்களுக்கு ஒரே ஒரு உதாரணமாவது என்னால் கொடுக்க முடியுமா என்று கேட்கிறாய். எத்தனையோ தர முடியும். ஆனால், நீ கேட்டபடி ஒன்றே ஒன்று சொல்லுகிறேன்.

தேச முன்னேற்றத்துக்குப் பெண்களே மிக முட்டுக் கட்டையா யிருப்பதாகச் சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது ஓரளவு உண்மை என்றே வைத்துக்கொண்டு பேசுவோம். ஆனால், அதற்குப் பொறுப்பாளி யார் என்பதில்தான் விவகாரம். ‘யதாபூர்வீகம்’ அதாவது பழமையை விடாமல் பற்றிக் கொண்டிருக்கும் குணம் நமக்கு மிக அதிகமாம். மாறுதலைக் கண்டால் நாம் மருள்கின்றோமாம். இது நமது ஜன்மத்தோடு பிறந்த இயல்பு என்று சொல்லுகிறார்கள். அறிவு விகாசமில்லாதவர்கள மாத்திரமல்ல; பல புத்திமான்கள் கூட இந்தப் பழியை நம்மீது சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த அபிப்பிராயம் தவறு என்று நான் இதோ நிரூபிக்கிறேன், பார்.

பெண்களுக்கு அறிவு கட்டை, உணர்ச்சி அதிகம் என்று இதே ஜனங்கள் சொல்லுகிறார்கள். இதைப்பற்றிய கிளை வாதத்தில் இறங்கவேண்டாம். இது சரியென்றே, வாதத்துக்காகவாவது, வைத்துக் கொள்ளுவோம். உணர்ச்சி மிகுந்தவர்களுக்குத்தான் சஞ்சலமும், மாறுதல் தாகமும் மிகுதி. பெண்கள் உணர்ச்சி மிகுந்தவர்கள், இளகிய மனம் உடையவர்கள் என்றால், அவர்கள் முன்னேற்றத்துக்கு இடறு கட்டையா யிருக்கிறார்கள் என்பது தவறல்லவா? ஆனால் உணர்ச்சியிலோ அறிவிலோ, ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிரமாத வித்தியாசம் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

அதிருக்கட்டும், “பெண்களுக்கு முன்னேற்றத்தில் மிகுந்த பிரமை உண்டு; அவர்கள் மாறுதலில் பெரிதும் ஆசை யுடையவர்கள்” என்பதற்கு நான் மிகவும் சாமான்யமான ஒரு உதாரணம் கூறுகிறேன். உனக்குத்தான் எங்கள் அடுத்தாத்துத் தங்கத்தைத் தெரியுமே. நீ மூன்று வருஷத்துக்கு முன்னே இங்கு வந்திருந்தாயே, அப்பொழுதிருந்த மாதிரி இப்பொழுது அவள் இல்லை. ரொம்ப அபிவிருத்தி. ஏதாவது இரண்டெழுத்தைச் சேர்த்துப் படிக்கத் தெரிந்து கொண்டாளாக்கும் என்று உதட்டைப் பிதுக்குகிறாய் நீ. அதுதானில்லை. அவளும் படிக்கவில்லை; அவள் குழந்தை மீனாள் படிப்பையும் நிறுத்திவிட்டாள். நான் சொல்லவந்த சங்கதி வேறே. நீ முன்னே வந்திருந்தபொழுது, அவள் கழுத்தில் ஒரு காறை, காதில் பவுன் ஓலை, கையில் விரல் பருமன் கட்டை கொடுத்த காப்பு இவை யெல்லாம் போட்டிருந்தாள். நீ இவற்றைக் கவனித்திருப்பாய் என்றே நினைக்கிறேன். இப்பொழுது நீ இங்கே வந்தாயானால், இந்த அபூர்வ நகைகளில் ஒன்றைக் கூடக் காணமுடியாது. இந்த நகைகளெல்லாம், இந்த மூன்று வருஷத்துக்குள் எட்டுத் தடவை ரூபம் மாறிவிட்டன. வெகு விரைவான முன்னேற்றம். காறை, ஏணிச் சங்கிலியாக அபிவிருத்தி யடைந்திருக்கிறது; ஓலை இமிடேஷன் வைரத்தோடாய் முன்னேறி யிருக்கிறது; காப்பு, நூல் போன்ற பல சிறு வளையல்களாக வளர்ச்சி யடைந்திருக்கிறது.

இது மாத்திரமா? புடவை, ரவிக்கை இவைகளிலும் பிரமாதமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்னே என்னவோ கொறநாட்டுச் சேலையிலும், அரக்குக் கறை ரவிக்கைத் துண்டுகளிலும்தான் அவளுக்கு மோகமதிகம். இப்பொழுது, லண்டனிலேயே சாயம் தோய்த்த கலர் புடவைகளாகத்தான் வேண்டுமென்கிறாள். வாயில்தான் தேவையாம். (மெட்ராஸிலிருந்து யாராவது இந்தப் பக்கம் வந்தால், ஒரு நாலு கஜம் வாயில் வாங்கி அனுப்பு; என்னிடம் அவள் பணங் கொடுத்திருக்கிறாள்.)

சரி; நான் தங்கத்தைப் பற்றி, எழுதியதெல்லாம் ஏதோ கேலி என்று நீ நினைக்கிறாயல்லவா? அப்படி யல்ல. ஒரு ஸ்திரீயின் மனோ தர்மத்தை விளக்குவதற்காகத்தான் நான் தங்கத்தைக் குறித்து இங்கு பிரஸ்தாபித்தேன். இதென்ன அற்ப மனோபாவம்? இதற்கும் முன்னேற்றத்துக்கும் என்ன சம்பந்தம்? என்று நீ கேட்பாய். ஒரே நீராவிதான் உங்கள் வீட்டுச் சிப்பல் தட்டைத் தூக்கி எறிகிறது; அதுவேதான் நீ ஏறி உட்காரும் ரயில் வண்டியையும் இழுத்துச் செல்லுகிறது. அதேமாதிரி தான் மனோபாவமும். ஒரு சந்தர்ப்பத்தில் பலவீனமாகக் காணப்படும் ஒரு உணர்ச்சியே இன்னொரு சந்தர்ப்பத்தில் மகா வலிமை வாய்ந்ததாகப் பிரகாசிக்கும். அற்ப விஷயத்தில் தோன்றும் பிடிவாதமே, பெரிய விஷயத்தில் மன உறுதியாகி விடுகிறது. பெண்களின் நிலைமையையும் சந்தர்ப்பங்களையும் உயர்த்தினால், அப்பொழுது அவர்கள் புருஷர்களை விட அதி தீவிர முன்னேற்றக்காரிகளா யிருப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. ஆடை யணிகலன்களிலும், பாத்திரம் பண்டங்களிலும் காணப்படும் இந்த மாறுதல்கள் அதற்கு ருஜுக்களே யாகும் என்று நான் கருதுகிறேன்.

உனது,

ராஜாத்தி.

பிரதாப விகடன்

ஒரு மாதாந்திர விகடப் பத்திரிகை. மாதிரி பிரதி அணா இரண்டு. வருடச் சந்தா ரூபாய் ஒன்று. நியூஸ் ஏஜெண்டுகளிடமும் ஹிக்கின்போத்தாம்ஸ் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஏஜென்ஸி விபரங்களுக்கு

மானேஜர்,

தபால் பெட்டி 23, ஜி. டி. மதராஸ்.

தராதர அறிவு

("திலீபன்" எழுதியது.)

துரோபதை நகைத்தாள். அவள் நகைப்பு, துரியோதனனைப் பார்த்து, எப்பொழுது தெரியுமா? துரியோதனன் குளத்தில் போய்த் தடுமாறி விழுவான். தட்டித் தடவி எழுந்து நடந்து மரத்தில் மோதி மனநோவான். அப்பால் சென்று, வேலியில் காலை வைத்து முள்ளைத் தைத்துக் கொள்ளுவான். இந்த அலங்கோலத்தைக் கண்டு, துரோபதை மாத்திரமா நகைப்பாள்? எவ்வளவுதான் இளகிய ஹிருதய முடையவர்களா யிருப்பவர்களுங் கூட, தங்கள் நகைப்பைத் தடுத்திருக்க முடியாதென்றே தோன்றுகிறது. ஆனால், துரியோதனன் என் இப்படிக் கோமாளிக் கூத்து ஆடினான்? எந்த சமயத்தில்? தருமர் ராஜசூய யாகத்தின் போது நடந்த சங்கதி இது. தருமரின் மாளிகைக்கு வந்த துரியோதனனுக்கு, அங்கிருந்த பொருள்களெல்லாம் தலைகீழாய்த் தோன்றின. வசந்த மண்டபம் படித் துறைக் குளமாயும், உயர்ந்த தருக்கள் நீண்ட ராஜபாட்டையாகவும், பூஞ்செடிகள் துஷ்ட ஜந்துக்களின் புற்றுப் போலவும், பசும் புல் தரை மண் மேடு போன்றும், காலடிப் பாதை வாய்க்காலாகவும் உருமாறி ஒருவன் கண்களை ஏமாற்றினால், பாவம், அவன் என்ன செய்வான்! இதெல்லாம் தேவதச்சன் செய்த சூழ்ச்சி என்கிறார் கதை சொல்லுபவர். துரியோதனனின் பொறாமையால் அவன் கண்ணைக் கவிந்த மாயாபடலத்தின் கோளாறு என்று நாம் எண்ணலாம்.

கதை உண்மையிலேயே வேதவியாசர் சொன்னதுதானா, வேறு யாராவது ஜோடித்த கற்பனையோ என்ற ஆராய்ச்சி நமக்கு வேண்டாம். துரியோதனின் இந்த ஆபத்துக்கு நாம் எல்லோருமே அநேகமாக அநவரதமும் ஆளாகிக் கொண்டே வருகிறோம். ஆனால், நம்மைக் கண்டு நகைக்க, துரோபதைகள்தான் பலர் கிடையாது. "எல்லாரும் செத்தால் கலியாணம்" அல்லவா? உலகிலுள்ள அநேக விஷயங்கள் நம்மை ஏமாற்றி வருகின்றன; இல்லை, நமது மாசுபடர்ந்த பார்வையால், அவற்றினிடம் நாம் ஏமாந்து வருகிறோம். "துடிக்கும் துடிப்புப் பரமாணுவிலேதான் உள்ளதோ, அல்லது என் கண்ணிலேதான் இருக்கிறதோ?" என்று ஏங்கினார் ஒரு தத்துவதர்சி. அவர் விஞ்ஞான அறிவு படைத்தவர். "எப்படியிருந்தாலும் துடிப்பு உண்மை" என்று நீங்கள் சொல்லுவீர்கள். ஆம்; அதையாவது நாம் தெளிவாய் அறிந்து கொள்ள வேண்டாமா? எந்தப் பொருளையே யானாலும் சரி, நாம் கோரப் பார்வை பார்க்கக்கூடாது. கோரப் பார்வைக்கும் உண்மைக்கும் வெகு தூரம்.

இந்த விதி வெளிக் கண்ணுக்கு மாத்திர மல்ல; அகக்கண்ணுக்கும் பொருந்தும். "நாம் ஒருவரையொருவர் பகைக்கும்படி செய்வதற்கு, போதிய சமயங்கள் நமக்கு இருக்கின்றன; ஆனால், ஒருவரை ஒருவர் அன்பு கொள்ளச் செய்வதற்குத்தான் நமக்கு மதமே இல்லை" என்று ஒரு அறிஞர் வருந்தினார். காரணம் என்ன? மதத்தின் உண்மையான மதிப்பு நமக்குத் தெரியவில்லை. நமது பலவீனத்தைக் கிளறுவதற்கு நாம் மதத்தில் நுழைகிறோம். குழந்தை வரத்துக்கும், ஒரு வேளைச் சோற்றுக்கும் கடவுள் காலில் போய் விழுவோமானால், அந்தக் கடவுள் நம்மைப் பார்த்துக் கேலிதானே செய்வார்! கடவுள் நம்முடைய வேலைக்காரனா, என்ன? அல்லது செப்படு வித்தைக்காரனா? உலகத்தைப் படைத்தவர் கடவுள் என்கிறோம். அப்படியானால், அதை மாயமாக்கி, மனித தர்மத்தைக் கெடுத்து, இயற்கையின் ஓட்டத்தைத் தடுமாறச் செய்ய, அவரை நாம் அழைக்கலாகாது. தான் ஆக்கிய நூலையே சின்னாபின்னம் செய்ய, ஓர் ஆசிரியனை நாம் கூப்பிடலாமோ?

"சாத்திரம் சுகத்துக்காகவே" என்பது சமர்த்து வார்த்தைதான். சுகத்துக்கு அந்தச் சாத்திரமே முரண்படும் பொழுது, சாத்திரத்திற்கு அடிபணிவது விவேகமாகுமா? என்றாலும், சாத்திரத்தின் அஸ்திவாரத்துக்கே ஆபத்து வந்துவிட்டது போல, நாம் அதைத் தாங்கி வாதாடுகிறோம். இது சாத்திரத்தை ஆதரிப்பதாகாது; அதை அவமதிப்பதற்கே சமமாகும். சமயமும், சாத்திரமும் மாத்திரமல்ல; சட்டம், அரசாங்கம், பணம், சொத்து, கலை முதலிய பலவற்றிலும் நாம் இப்படித்தான் நடந்து கொள்ளுகிறோம். கோணல் நடத்தை! இந்தக் கோணல் நடத்தையின் மூல காரணம், நாம் அவற்றை நோக்கும் பார்வை கோரமாயிருப்பதுதான்.

அது எதுவாயிருந்தாலும் சரி, இன்னின்ன பொருளுக்கு இன்னின்னதான் மதிப்பு என்றறியத் தக்க விவேகம் நமக்கு வேண்டும். தவறான மதிப்பிலிருந்து நாம் தொடங்கினோமானால், நமது காரியங்கள் எப்படி ஒழுங்காயிருக்க முடியும்? தினை விதைத்தால் தினைதான் விளையும். தவற்றிலிருந்து தவறுதான் பிறக்கும். எண்ணத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் அவிவேகம் செயலைச் சோடையாக்குகிறது; வாழ்வைப் பாழ் செய்கிறது. வர்ணப்படம் எழுதும் ஒரு ஓவியக்காரன், வர்ணக் கண்ணாடிகளைக் கண்ணுக்குத் தரித்துக் கொள்ளலாமோ? கண்ணாடியின் நிறம் ஓவியனின் கண்ணை மயக்கிக் கைத்திறத்தைப் பாழ் செய்கிறது. மனிதன் திக்கற்ற பொழுது, சமயம் பிறந்தது; சரித்திரத்திலே உதித்து சரித்திரத்திலே மடிவது சாத்திரம்; தேவைக்குச் செல்வம், துணைக்கு அரசாங்கம், ஒழுங்குக்குச் சட்டம். மற்றப் பொருள்களையும் இப்படித்தான் நாம் பார்க்க வேண்டும்.

அறிவை விருத்தி செய்வது நியாய சாஸ்திரம். யுக்தி, அனுபவம், பிரமாணம் இம்மூன்றும் அதன் அங்கங்கள். என்றாலும், யுக்திக்கும் அனுபவத்துக்கும் முரண்படும் பிரமாணம் பிரமாணமல்ல. ஏனெனில், பிரமாணத்தின் பிறப்பே யுக்தியிலும் அனுபவத்திலும்தான். ஆகையால், சாத்திரமோ, சமயமோ, வேறெதுவோ ஆனாலும் சரி, எந்தப் பிரமாணத்தையும் யுக்தி, அனுபவம் என்ற உரைகற்களில் சோதித்துப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் நமக்குப் பார்வைத் தெளிவு உண்டாகும்; தராதர அறிவு உண்டாகும்.

யாத்ரா மார்க்கம்

"ராமாயணக் காட்சி போல"

அன்று ராமபிரான் செல்லும்போது வழியில் கங்கையைக் கடக்க வேண்டியிருந்தது. குகன் தோன்றினன். அய்யனிடம் தனக்கிருந்த பக்தியைக் காட்டினன். அந்த காட்சியை வாசகர்கட்கு நினைப் பூட்டும்படியாக மகாத்மாவின் யாத்திரைச் செய்தி ஒன்று கிடைத்துளது. மகாத்மா பரம்காட் என்ற ஊருக்குப் போனவுடன் நர்மதை நதியைக் கடக்கவேண்டியிருந்தது. படகோட்டிகள், "அய்யனுக்குப் பாத பூஜை செய்த பின்பே படகைச் செலுத்துவோம்" என்று வெகு பிடிவாதமாக வாதாடினர். கடைசியில் அவர்கள் இஷ்டப்படி பூஜை முடித்த பின்பே படகு நகர்ந்தது.

புஷ்ப வர்ஷம்

தமோலா என்ற ஊரில் சுமார் 50 ஆயிரம் மக்கள் மகாத்மாவைத் தரிசிக்கக் கூடியிருந்தனர். புஷ்பத்தைக் கூடை கூடையாக வாரி வாரி அண்ணல்மீது சொரிந்தனர். மகாத்மா "வேண்டாம், வேண்டாம்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டதன் பின்னர்த்தான் புஷ்ப வர்ஷம் நின்றது.

மதிப்பு மிக்க 50 ரூபாய்

மகாத்மா புறப்பட்ட தினத்தினின்று ஹரிஜன சேவைக்காகப் பணமும் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு சராசரி 2000 ரூபாய் வீதம் சேருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. 50 ஆயிரத்துக்குமேல் ஹரிஜன நிதிக்கு வசூலாகிவிட்டது. ஆயினும் 'தேவ்ரி' என்ற இடத்தில் ஏழை ஹரிஜனங்கள் காசுகாசாகச் சேர்த்துத் தந்த ஐம்பதே ஐம்பது ரூபாய்க்கு மகாத்மா தந்த மதிப்புக் கொஞ்சம் நஞ்சமன்று.

ஒரு கட்சி விவகாரமல்ல!

ரெய்ப்பூரில், ராஜகுமாரர்களின் காலேஜ் ஒன்று இருக்கிறது. அதில் அரச குமாரர்களும், ஜமீன்தார் குழந்தைகளும் படிக்கின்றனர். காலேஜின் பிரின்ஸிபால் மிஸ்டர் எல். ஸ்மித் பியர்ஸ் என்ற ஆங்கிலேயர். அவர் மகாத்மாவைக் காலேஜுக்கு அழைத்தார். ஆங்கிலேயரும் பலர் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். "சர்வ மனிதர்களும் சமத்துவமாகவே வாழ வேண்டும்" என்பதை விளக்கி, மகாத்மா ஓர் உருக்கமான பிரசங்கம் புரிந்தார். கூட்ட முடிவில் பிரின்ஸிபால் ஆச்சரியத்துடன் தெரிவித்த அபிப்பிராயம் என்ன தெரியுமா? "காந்திஜீ எதிர்க் கட்சியை எடுத்துச் சொல்லுவார் என்று நான் நினைத்திருந்தேன். ஆனல் அவர் உலகத்திலுள்ள சகலமானவருக்கும் பொருத்தமான மகா தத்துவங்களை யல்லவா சொல்லுகிருர்! இதை எவர்தான் ஒப்புக் கொள்ளாது மறுக்க முடியும்" என்று அந்த ஆங்கிலேயர் கூறினர்.

பெருமைக்குக் காரணம்

ரெய்ப்பூர் ஹரிஜன ஊழியர் முன் பேசுகையில் மகாத்மா கூறியதாவது:—"ஹரிஜன சேவா சங்கத்தில் தன்னையும் மற்ற ஸ்திரீ புருஷர்களின் எண்ணிக்கை எவ்வளவுக் கெவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு சங்கத்தின் பெருமையும் உயரும். காங்கிரஸுக்குப் பெருமை இப்படித்தான் வந்தது. சென்ற 15 வருடங்களில் ஆயிரக்கணக்கானவர் தாமாக வறுமையை அணைந்து கொண்டார்கள். அதற்கு முந்தியும் பலர் தியாகம் செய்திருக்கிருர்கள். அவர்கள் தங்கள் சொத்தை யெல்லாம் துறந்து, காங்கிரஸை நிருமித்து விட்டார்கள். காங்கிரஸ் அரசியல் ஸ்தாபனம். ஹரிஜன சேவா சங்கமோ சமயசம்பந்தமானது. இதன் தொண்டர் அதைவிட இன்னும் அதிக பரிசுத்தமானவர்களா யிருக்க வேண்டும். கஷ்டங்களைக் கண்டு நாம் சோர்வுற லாகாது. ஆண்டவன் அவற்றைத் தீர்த்து வைப்பார். சுதாமாவைப் போல, சகலத்தையும் துறந்து ஈசனை நாம் சரணுகதி யடைந்துவிட வேண்டும். இப்படிச் செய்வோமானல், அவர் நமது லட்சியத்தை சித்திக்கச் செய்வார்."

சல்லடை ஏலம்

கோண்டியாவில் வண்டி புறப்படும் சமயத்தில் ஒரு ஏழை ஸ்திரீ ஒரு சல்லடையைக் காந்திஜீக்கு 'பிரஸண்ட்' செய்து விட்டாள். இது ஒரு புது சாமானு யிருப்பதைப் பார்த்ததும், ஐயன் "இதென்ன இது!" என்று ஆச்சரியத்தோடு கூவினர். வண்டி புறப்பட ஒரு நிமிஷமே இருந்தது. அதற்குள் அதை ஏலம் போட்டுவிட்டார். விலை நாலணவிலிருந்து 21 ரூபா வரை ஏறி, சல்லடையும் விற்பனையாகி விட்டது.

இது பலாத்கார மாகுமோ?

(ரிச்சர்டு பி. கிரேக்)

[காந்திஜீயின் அமெரிக்க நண்பரில் ஒருவரான ரிச்சர்ட் பி. கிரெக் மகாத்மாஜிக்கு எழுதிய ஒரு கடிதத்தின் சாரம்.]

தங்கள் உபவாசங்களுக்குப் பிரமாதமான சக்தி இருக்கிறது. அதற்காக, அவற்றைப் பலாத்காரமானவை என்று சொல்லுகிருர்களே, அது தவருகும். தங்கள் உபவாசத்தால் ஜனங்களுக்கு ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கலாம். அதனுல் உபவாசம் பலாத்காரமானது என்று சொல்ல முடியாது. தேகத்துக்கு ஏதாவது தீங்கு ஏற்படுமோ என்ற பயத்தை உண்டாக்கி ஒருவரை நிர்ப்பந்திப்பதுதான் பலாத்காரமாகும். தங்கள் உண்ணுத் தவங்கள் இப்பேர்ப்பட்டவையல்ல. உங்கள் எதிரிகளையும் மதித்து, அவர்களுடைய நல்ல குணங்கள் மேம்பட்டெழச் செய்ய வேண்டுமென்பதே உங்கள் உபவாசத்தின் நோக்கம். இது பலாத்காரமல்ல.

பலாத்காரம், உபவாசம் இரண்டினுலும் எதிரிக்கு ஒரே மாதிரி சிரமம் ஏற்படுவதாகத்தா னிருக்கட்டுமே. அதனுலும், இரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்று சொல்லிவிட முடியாது. மின்னல், மடிசல், வாள் மூன்றினுலும் மரம் முறிந்து விழுகிறது. இதனுல் இம் மூன்றும் ஒரே ரகமானவை என்று சொல்லலாமோ? பலன் ஒன்றுதான்; ஆனல் மூன்றும் மூன்று விதமாக வேலை செய்கின்றன. உபவாசம் எதிரியின் மனத்தைக் கிளறி, தர்ம சிந்தனைகளை எழுப்புகிறது. இது பலாத்காரமாகுமோ?

"அழகு என்னை ஆட்கொண்டு விட்டது" "சத்தியத்துக்கு நான் கட்டுப்பட்டு விட்டேன்" என்று சில சமயம் நாம் பேசுகிறேம். வனப்புக்கும், சத்தியத்துக்கும் ஓர் உயர்தர வசீகர சக்தி இருக்கிறது. அவற்றிற்கு நாம் கட்டுப்பட்டு விடுகிறேம். இது பயத்தாலல்ல. அஹிம்சா தர்ம ரீதியான உண்ணுத் தவத்திலும் சத்தியமும் அழகும் இருக்கின்றன; ஜன சமூக நீதி பற்றிய ஒரு சத்தியம், தர்மத்தின் பெருமையான ஒரு சௌந்தர்யம் இந்த இரண்டும் அதில் இருக்கின்றன.

இவற்றிலே அச்சம் என்பது கிடையாது.

“ தருக்க முறையில் எதிரியின் அறிவுக்குத் திருப்தி உண்டாக்காமல் அவனை வணக்கிவிட முயற்சிப்பது பலாத்காரமே யாகும்” என்று சொல்லுகிறார்கள். ஒரு மனிதன் அல்லது கூட்டத்தாரின் எண்ணங்களெல்லாம் முற்றிலும் அறிவாராய்ச்சியால் ஏற்பட்டவை யென்று சொல்ல முடியாது. முதலில் ஏற்படுவது உணர்ச்சி ; பிறகுதான் அதற்குக் காரணம் தேடிக் கொள்ளுகிறார்கள். ஆகையால், மனத்தை மாற்றுவதற்கு, வெறும் தருக்கத்தால் முடியாது. உணர்ச்சியைக் கிளறும் தூண்டுதலும் வேண்டும். உபவாசம் செய்பவன் இவ்விரண்டையும் செய்கிறான். உபவாசத்திலே வெற்றி கிடைத்தால், எதிரிக்குப் புதிய மனோபாவம் உண்டாகிறது. அப்பொழுது அவன் அறிவு திருப்தி யடையும்படியான காரணத்தையும் கண்டுபிடித்துக் கொள்ளுகிறான். இதைப் பலாத்காரம் என்று கூற முடியாது. எதிரியின் மனமாறுதல் என்றுதான் சொல்ல வேண்டும்.

—“ஹரிஜன்.”

காந்தியின் தமிழ் நாட்டு ஞாபகம்

ரெய்ப்பூரில் ஒரு கதர்த்துண்டு ஏலத்தில் போட்டி 30 ரூபாய் வரையில்தான் ஏறிற்று. காந்திஜீக்குத் திருப்தி உண்டாகவில்லை. “தமிழ் நாட்டில் இந்த மாதிரி ஒரு கதர்த்துண்டை நான் 1000 ரூபாய்க்கு விற்றிருக்கிறேன். இப்பொழுது அவ்வளவு கிடைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இருந்தாலும் 30 ரூபாய்க்கு இதை விற்க, எனக்குச் சம்மதமில்லை” என்றார். பலனைக் கேட்க வேண்டுமோ? கேள்வி ஏறலாயிற்று.

தமிழ் நாடு ஹரிஜன மகாநாடு

மகாத்மாவின் தமிழ் நாட்டு விஜயத்துக்கு முன்னதாக மாகாண ஹரிஜன மகாநாட்டைக் கோயமுத்தூரில் நடத்தியது மிக்க பொருத்தமான யோசனையாகும். இந்த மகாநாட்டுக்குத் தமிழ் நாட்டின் பல மூலைகளினின்றும் அநேக தேச பக்தர்களும் ஹரிஜன ஊழியர்களும் வந்திருந்தனர். “எங்கள் ஊருக்கு மகாத்மா வரவேண்டும்; எங்கள் ஊரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்” என்று ஊழியர்கள் அன்று காலையில் டாக்டர் ராஜனிடம் கேட்டுக் கொண்டபோது ஹரிஜன சேவையிலும் மகாத்மா விடத்திலும் தேசத்துக்கிருந்த பக்தி தெளிவாய்த் தெரிந்தது. இந்த சந்தர்ப்பத்தில் திருச்சியினின்று ஸ்ரீயுத சந்யாசி, நீலகிரியினின்று ஸ்ரீமான் கேசவலு, கூனூரினின்று திருவாளர் ஷண்முகம் முதலிய ஹரிஜனத் தலைவர்களும் இம் மகாநாட்டுக்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்க விஷயமே. ரைட் ஹானரபிள் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும் இந்த மகாநாட்டுக்கு விஜயம் செய்து வீற்றிருந்தது அனைவருக்கும் திருப்தி யளிப்பதாயிருந்தது.

வெறுமனே பேச்சோடு நில்லாமல், ஹரிஜன முன்னேற்றத்துக்கான செயல்களில் இறங்க வேண்டுமெனத் தீவிர அபிப்பிராயம் கொண்டவர் டாக்டர் சுப்ராயன். அவருடைய தலைமைப் பேருரை அன்று வெகு தெளிவாயிருந்ததென்பது சொல்லத் தேவையில்லை. மகாநாட்டில் மகாத்மாவின் வரவேற்பைச் சிறப்பாக நடத்திவைக்க வேண்டுமென்றும், ஆங்காங்கு நிதிகள் வசூலித்துத் தர வேண்டுமென்றும், ஹரிஜன முன்னேற்ற விஷயத்தில் சர்க்கார் அதிக சிரத்தை காட்டாததைக் கண்டித்தும், டெல்லி சட்டசபையில் வந்துள்ள மசோதாக்களை ஆதரித்தும் பற்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் ஆணித்தரமாகப் பேசிய பெருமையைத் தேவகோட்டை ரங்கசாமி அய்யங்காருக்கே கொடுக்கவேண்டும். நாட்டார்—ஹரிஜனப் பிரச்சினை விஷயமாக அவர் பேசிய பேச்சு அனைவர் உள்ளத்தையும் கவர்ந்தது. மகாநாட்டில் ஸ்ரீமதி சாரதாம்பாள் நிகழ்த்திய சொற்பொழிவில் ஸ்திரீகள் இந்தச் சேவையில் பெரிதும் ஈடுபட வேண்டுமென வேண்டிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கதே.

‘இந்த மகர்நாட்டைக் கோயமுத்தூரில் கூட்டுகிறார்களே, அங்கு வரவேற்பு எவ்வாறிருக்குமோ’ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தவர்களெல்லாம் வியப்புறும் வண்ணம் வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஊரெங்கும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. வரும் அதிதிகளுக்குச் சவுகர்யமாக போஜன வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தன. இவ்வளவு சிறப்பாக இம் மகாநாடு நடந்ததற்கு ஸ்ரீயுத அவநாசிலிங்கம் செட்டியார், திருவாளர் வெள்ளியங்கிரி கவுண்டர், ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியார், ஸ்ரீயுத வி. பி. சுப்பையா முதலிய உள்ளூர்த் தலைவர்களின் உழைப்பே முக்கிய காரணமாகும்.

பிரபல ஜோதிடம்

இராஜாக்களாலும் பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர். ஒரு முறை பரீக்ஷியுங்கள். ஒரு வருஷ வாரப் பலன் எழுத ரூ. 7. மாத பலனுக்கு ரூ. 2 ஆரூடம் 5-கேள்விக்கு ரூ. 1. விவாக விஷயம் ரூ. 1. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரமாவது தேவை.

புதுச்சேரி, வி. தியாராஜ பிள்ளை.
215, தங்கசாலை வீதி,
சென்னை.

விவாஹத்திற்கு

ரூ. 1000

உங்களுக்கு வேண்டுமா?

விவரங்களுக்கு எமக்கெழுதவும் :—

கலியாண உதவி நிதி,

589, பைகிராப்ட்ஸ் ரோட்,

மதருஸ்.

BOOKS by MAHATMA GANDHI

(in English)

	Rs.	A
Satyagraha in South Africa ...	4	8
Young India Vol. I ...	4	0
Young India Vol. II ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

சட்டசபைத் தமாஷ்கள்

புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டால்தான் தூக்கம் வரும் சிலருண்டு. ஆனால் டெல்லி சட்டசபையிலோ எல்லோருக்குமே தூக்கம் வந்துவிடும். அவ்வளவு கம்பீரமாக, உல்லாசமாக நடவடிக்கைகள் நத்தையோடு போட்டி போட்டுக்கொண்டு நகர்ந்து கொண்டிருக்கும். அப்போது நாற்காலிகளில் சில அங்கத்தினர்கள் தூங்கி விழுகிறார்களென்றால், ஏன் தூங்கமாட்டார்கள்?

நாடகக் கொட்டகைகளிலும் கதா காலட்சேபங்களிலும் 'ரஸிகர்'கள் தூங்குவதாகத் தெரிந்தால் அவர்கள் திடுக்கிட்டு எழுந்திருக்கும் வண்ணம் அவ்வப்போது சில்லறைத் தமாஷ் பாணங்களைச் செலுத்துவது சகஜம். அந்தக் கருவியை டெல்லி சட்டசபையிலும் அவ்வப்போது சிலர் உபயோகிப்பதுண்டு. அறிந்தே சிலர் தமாஷ் பேசுவார்கள். பலர் தாங்களறியாமலே பேசிய சொற்கள் சபையோருக்குத் தமாஷாயிருக்கும். சொல்பவனுக்கும் தெரியாமல் கேட்போருக்கும் தெரியாமல் தெருவில்பத்திரிகை வாங்கிப் படிப்பவனுக்குத் தமாஷாக அநேக விஷயங்கள் நடப்பதுண்டு. நிற்க, "சட்டசபை அங்கத்தினர்களாகிய நாங்கள் இதுவரை சர்க்காருக்குச் செய்திருக்கும் ஊழியத்துக்கு அறிகுறியாக இந்தச் சட்டசபையை இந்தியாவின் நிரந்தரச்சட்டசபையாக கவர்னர் ஜனரல் வைப்பாரா?" என்று மிஸ்டர் நியோகி ஓர் குறும்புக் கேள்வி கேட்டார்.

"விஷயம் அநேக அங்கத்தினர்களுக்கு ருசிகரமாயிருக்கலாம். ஆனால் சர்க்கார் அவ்வாறு செய்யத் தயாராயில்லை" என்று மொட்டையாகப் பதிலளித்தார் சர்க்கார் மந்திரி. "சர்க்கார் இப்படி எங்களிடம் நன்றி மறந்து விடலாமா?" என்று நியோகி கூறியபோது, சபையில் தூங்கியபேர்களெல்லாம் விழித்துக் கொண்டு எல்லோருமாகச் சிரித்திருப்பார்கள் என்பது நிச்சயம்.

"சில சட்டங்களைப் பற்றிப் பேசும்போது பெண்கள் சார்பாகப் பேசுவதற்கு சில ஸ்திரீ அங்கத்தினர்களை சர்க்கார் நியமித்தால் தேவலை" யென்று மிஸ்டர் சிங் கூறினார். விஷயத்தை யோசிப்பதாக சர்க்கார் அதிகாரி பதிலளித்தார். "இங்குள்ள அங்கத்தினர்களின் மனைவிமார்களில் சிலரையே நியமித்தால் சவுகர்யமாயிருக்கும்" என்று மிஸ்டர் ஜாக் கூறினார். "அப்போது ஆண்களின் பேச்சுச் சுதந்திரம் போய்விடுமே!" என்று தலைவர் குறிப்பிட்டபோது, சபையோர் சிரிக்க நேர்ந்தது.

சபையில் அவ்வப்போது சிலர் அருமையான தமாஷ் கதைகள் சொல்வதுண்டு. சமீபத்தில் ரிஸர்வ் பாங்கு மசோதா வாதிக்கப் பட்டபோது ஸ்ரீமான் வித்யாசாகர பாண்டியா சொன்ன கதை பலருக்கு ரஸமாயிருந்திருக்கலாம்.

"ஒட்டகங்களுக்குக் கல்யாணம் நடந்தபோது வந்திருந்த கழுதைகள் சங்கீதக் கச்சேரி செய்தன. ஒட்டகங்களின் ரூபலாவண்யங்களைப் பற்றிக் கழுதைகள் புகழ்ந்ததால், கழுதைகளின் இனிய குரலைப்பற்றி ஒட்டகங்கள் சிலாகித்தன" என்று மிஸ்டர் பாண்டியா சொல்லிக் கொண்டே வந்தார். "இந்தச் சபையில் யார் கழுதைகள்? யார் ஒட்டகங்கள்?" என்று ஸர் ஜஹாங்கீர் நடுவில் விழுந்து கேட்டார். "அவரவர்கள் எந்த இனத்தை வேணுமானாலும் சேரலாம்" என்று பாண்டியா கூறியபோது சபை திடுக்கிட்டு விட்டது.

தேச முன்னேற்ற வேலை செய்யாவிடினும் ஹாஸ்ய முன்னேற்றத்தையாவது செய்து கொண்டிருக்கிறார்களேயென்று தெனாலிராமன் ஆத்மா சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கும்.

வேண்டுகோள்

வாசகர்களே! புதுவை பாரதி சங்க ஸ்தாபகராகிய இளைஞர் சுப்ரமணியத்தை யாராவது கண்டீர்களா? கண்டால் அவரை உடனே புதுவைக்கோ அல்லது சங்குக் காரியாலயத்துக்கோ போகும்படி தூண்டுங்கள். அல்லது அவர் விலாசத்தையாவது அறிவியுங்கள். பெற்றோர், சுற்றத்தார், நண்பர் முதலியவர்களின் வருத்தம் வர வர அதிகமாகி வருகின்றது.

சங்கு ஸுப்ரஹ்மணியன், சென்னை.
பாரதி தாஸன்,
செங்குந்தர் தெரு, புதுவை.

செய்தித் திரட்டு

மகாத்மா தலைமை வகிப்பார்

தட்சிணபாரத ஹிந்தி பிரசார சம்மேளனமும், பட்டமளிப்பு விழாவும் டிசம்பர் 22ல நடத்துவதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. பட்டமளிப்பு விழாவுக்கு மகாத்மாஜீயும் சம்மேளனத்துக்கு சுவாமி சத்ய தேவரும் தலைமை வகிப்பார்கள்.

படேலின் மரண சாசனம்

ஸ்ரீயுத வித்தல்பாய் படேல் தமது மரண சாஸனத்தில் தேச சேவைக்காக ஒரு லட்சம் ரூபாய் எழுதி வைத்திருக்கிறார்.

கமலாதேவிக்குத் தண்டனை

ஏதோ ஒரு பிரசங்கம் செய்ததற்காக ஸ்ரீமதி கமலாதேவியும், அதை மொழிபெயர்த்துச் சொன்னதற்காக ஸ்ரீயுத காளேஸ்வர ராவும் ஓரோர் வருஷ வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.

மணிபென்னுக்கு 18 மாதம்

சீமதி கஸ்தூரிபாய் காந்தியோடு கைது செய்யப்பட்ட சீமதி மணிபென் படேலுக்கு 15 மாதக் கடுங்காவல் விதிக்கப்பட்டிருக்கிறது.

ஜவஹர் பங்குகள் ஜப்தி

பண்டித மோட்டிலால் நேரு ஆயுளோடிருந்த காலம் துவங்கி இதுவரை பாக்கியாயிருந்துவரும் வருமான வரியை பண்டித ஜவஹர்லால் நேரு செலுத்த மறுத்துக்கொண்டே யிருப்பதால், அவருக்கு ரயில்வேக் கம்பனிகள் முதலியவற்றிலுள்ள ரூ. 20,000 பங்குகள் சர்க்காரால் ஜப்தி செய்யப் பெற்றுளவாம்.

சட்ட மறுப்புக் கைதிகள்

இந்தியா பூராவுக்கும் உள்ள சட்ட மறுப்புக் கைதிகளைப் பற்றி சர்க்கார் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கை பின்வரும் புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறது:—

1933 அக்டோபர் முடிவில்	3361
1933 செப்டம்பர் முடிவில்	4299
1932 அக்டோபர் முடிவிலோ	18,253

உபரி ஜட்ஜி

சென்னைச் சதிவழக்கை விசாரிப்பதற்காக, இன்னும் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜியை உபரியாக சர்க்கார் நியமிக்கப் போவதாக ஒரு வதந்தி கிளம்பியிருக்கிறது.

ஸ்ரீயுத கிட்டப்பா

பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னே ஒருநாள் சென்னை ராயல் தியேட்டரில் மார்க்கண்டன் நாடகம். ஏராளமான கும்பல். அன்று மார்க்கண்டனாக வந்த சிறுவனின் சாரீரமும், அவன் 'பிடி'களும், ரவை ஜாதிகளும் சபையோரைப் பிரமிக்கச் செய்துவிட்டன. அன்று மோஹன ராக மழையில் முழுகிப்போன ஓர் ரஸிகர் மெய் மறந்து, "அட அல்பாயுஸே! எது அபாரமா யிருக்கே. இவன் ஆயுளோடு இருக்கவேண்டும்" என்று அருகி லிருந்தவர்களிடம் புகழ்ந்தார். அன்று மார்க்கண்டனாக வந்தவன் இன்று உயிரோடில்லை. திறமைசாலிகளுக்கு இவ்வுலகில் வெகு நாள் இடமில்லை என்பது பழமொழி. அப்பழமொழி மாஸ்டர் எஸ். ஜி. கிட்டப்பா சம்பந்தப்பட்ட மட்டில் உண்மையாகி விட்டது. இருபத்தெட்டாவது வயதிலேயே உலக நாடக மேடையினின்று மறைந்துவிட்டார்.

சிறுவயதில் கிட்டப்பாவுக்கு இருந்த சாரீரத்துக்கும் சமீப காலத்தில் அவருக்கிருந்த சாரீரத்துக்கும் ஏராளமான வித்யாசம் உண்டு. வயது ஆக ஆக சாரீரம் கடைசலெடுத்தாற்போல மாறி, தொண்டையில் ஒரு கம்பீரம் ஊறிக் கொண்டே வந்தது. நாடக மேடையில் சாரங்கா, சகானா, தன்யாசி, வஸந்தா, காபி போன்ற சில அபூர்வ ராகங்களை கிட்டப்பா பாடிய 'வழி'களைக் கண்டு அநேக பெரிய வித்வான்களெல்லாம் வியப்புற்றதுண்டு. மகாராஷ்டிர தேசத்தில் பால கந்தர்வா எத்தகைய ரவை ஜாதிகளைத் தமது சங்கீதத்தில் போடுகின்றாரோ அதைத் தமிழ் நாட்டில் கிட்டப்பாவிடம்தான் கண்டு கொண்டிருந்தோம். நாடகத்தில் ஈடுபடாமல் கச்சேரி வித்வானாகத் தம்மைப் பழக்கம் செய்து கொண்டிருந்தாரானால், சங்கீத உலகத்திலும் ஓர் 'புள்ளி'யாய் அவர் இருந்திருப்பாரென்பது திண்ணம்.

சிறுவயதில் குறத்தி, வள்ளி முதலிய வேடங்களில் கிட்டப்பாவைக் கண்டவர்கள், அவர் நல்ல ஸ்திரீ வேஷக்காரராக வரக்கூடும் என்று எதிர் பார்த்ததுண்டு. ஆனால் சாரீரம், சரீரம் இரண்டும் அவரை ராஜபார்ட்டாக உலவி மறையுமாறு ஆக்கிவிட்டன. பேச்சில்கூட ஒரு 'வெடுக்கு'த் தனத்தை அவர் விருத்தி செய்து கொண்டுவிட்டார். ஏதோ ஒன்றிரண்டு பெரிய ஆக்டர்களோடுதான் அவர் 'பதவிசாக' நடிப்பாரென்ற வதந்தியும் ஏற்பட்டுவிட்டது. அதற்கெல்லாம் அவரது பால்ய காலத்து சகவாசமே காரணமென்று சொல்வதைத் தவிர வேறெதைக் கூறமுடியும்?

நடிப்புத் திறமை அதிகமுடையவரெனவோ, வாக் சாதுர்யம் மிகுந்தவரெனவோ கிட்டப்பாவைச் சொல்வதற்கில்லை. ஆனால், தமிழ் நாட்டு நாடக மேடையில் சங்கீதத்தைப் பிணைத்து அது நாடகத்தின் முக்கியமான அங்கம் என்ற நினைப்பு இருந்துவருகிறதே அந்த எண்ணத்தை அதிகரிக்குமாறு செய்தவர் கிட்டப்பா. கொட்டகையில் வரும் அபிமானிகளுக்கு கதை நகர வேண்டாம்; வாக் சாதுர்யம் வேண்டாம்; கன்னையா கம்பெனியின் அழகான ஸீன்கள்மீதுகூட கவனம் சிலர் செலுத்துவதில்லை; "பாடு! பாடு!" என்று கிட்டப்பாவைக் கேட்பதில்தான் சில அபிமானிகளுக்கு இன்பம். அந்த வசிகரப் பாட்டை இனி எங்கு கேட்கப் போகின்றோம்!

மேடையில் எப்படி நடிக்கின்றார்களோ அப்படியே வீட்டிலும் நடந்து கொள்கின்ற ஆக்டர்கள் சிலருண்டு. ஆனால் மேடையில் பார்க்கும் கிட்டப்பா வேறு; வீட்டில் நாம் சந்திக்கும் கிட்டப்பாவோ முற்றிலும் வேறு. நான் ஐந்தாறு தடவைதான் சந்தித்திருப்பேன். அப்போது கவனித்த அளவில் சரசமாக சம்பாஷிப்பதிலும், நண்பர்களோடு குலாவுவதிலும் கிட்டப்பா இஷ்டமுடையவர் என்பது தெரிந்தது. ஓவியம், இலக்கியம் முதலியவைகளிலும் ரசனை உடையவர். எல்லாவற்றையும்விடக் குறிப்பிடத்தக்க விஷயம் கிட்டப்பா, தேச பக்தி உடையவர். சிறை சென்று திரும்பிய தேச பக்தர்களுக்கு அவர் உதவிசெய்ததுண்டு. காங்கிரஸ் கூட்டமொன்றில் அவர் தமது பேனா, மோதிரம் முதலியவைகளை ஏலம்போடக் கொடுத்ததுண்டு. அவ்வப்போது பொது விஷயங்களுக்காகத் தர்ம நாடகம் நடத்தித் தருவதற்கும் அவர் தயங்கியதில்லை.

ஸ்ரீயுத கிட்டப்பாவின் சகோதரர்களுக்கும், இதர உறவினர்களுக்கும் எனது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

—ஸா. ஸா.

டாக்டர் எம். எம். டன் என்பருடைய மூளையைக் குளிர்ச்சி செய்வதும், மயிரை வளரச் செய்வதுமான வாசனைத் தயிலத்தை உபயோகியுங்கள்.

—டிராம் டிக்கட் விளம்பரம்.

அவருடைய மூளையைக் குளிர்ச்சி செய்ய, நாம் காசு தரவேண்டுமோ?

* * *

தீயால் மரணம்
(நமது நிருபர்)

—செய்தித் தலைப்பு.

ஐயோ பாவம்! அவருடைய குடும்பத்திற்குப் பத்திரிகாலயம் உபகாரச் சம்பளம் கொடுக்கப் போகிறதா?

* * *

டிக்கட் இன்றிப் பிரயாணம் செய்ததாக—ஒரு ரஸமான வழக்கு.

—செய்தித் தலைப்பு.

இருக்காதா? டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தால் அது ரஸமாக மாத்திரமா இருக்கும்? அதிரஸமாகக் கூட இருக்கும்.

* * *

மறுபடியும் குறைக்கப்பட்ட சகாயமான விலை.

—சாமான் விளம்பரம்.

குறைப்பது கடிக்காது என்பார்கள்; கடிக்காத வரையில் யாரும் வாங்க மாட்டார்களென்றே தோன்றுகிறது.

* * *

சிரிப்பே சிறந்த ஔஷதம்.

—ஸினிமா விளம்பரம்.

மருந்துக்குப் பதிலாக இனி வைத்தியர்கள் விகடப் பத்திரிகைகளை நோயாளி மீது பிரயோகிக்கலாமோ?

* * *

தம்மால் அனுப்பப்பட்ட விஷயங்கள் அஜெண்டாவில் அழிக்கப்பட்டது குறித்து ஸ்ரீமதி தாயம்மாள் காரணம் கேட்டார்.

—தமிழ்த் தினசரி.

அஜெண்டா என்பது வடக்கேயிருக்கும் குகையா அல்லது விஷய ஜாப்தாவா?



ஆசிரியர் பேச்சு !

பழமை பழமை யென்று
பாவனை பேசலன்றி
பழமை யிருந்தநிலை—கிளியே
பாமரர் ஏதறிவார் ?

என்ற பாரதியார் பாடலை நாம் முதலில் மனனம் செய்து கொள்வோம். வெறுமனே விஷயம் தெரியாது பழமையைப் புகழ்வதைவிட கொஞ்சமாவது விஷயத்தை அறிந்துகொண்டு புதுமைக்குப் பழமையை உபயோகப் படுத்திக்கொள்வது நல்லது. தேசத்தின் நாகரிக வாழ்வுக்கு அறிகுறி கலை வளர்ச்சி என்பர் அறிஞர்.

சித்திரக் கலையில், சிற்பக் கலையில் தமிழர் எவ்வளவு முன்னேறி யிருந்தோம் தெரியுமா ? ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே யிருந்த தமிழ்ச் சிற்பி இன்றைக்கும் நம்மோடு பேசிக் கொண்டிருக்கின்றானே ! தமிழா! தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா காலத்தில் கட்டப்பட்ட தமிழ்க் கோபுரங்களைப் பார்! இந்த மாதிரி வட நாட்டிலாவது உலகில் வேறெங்கிலுமாவது வேலைப்பாடுண்டா ? இந்தக் கோபுரங்களின் அழகைக் காண வேண்டுமென்று வெளி நாட்டிலிருந்து ரஸிகர்கள் இன்றைக்கும் தேடி ஓடி வருகிறார்களே ! தமிழராகிய நாமோ நமக்கு அருகிலிருக்கும் காட்சி யின்பத்தை அநுபவிக்கா திருக்கின்றோமே, என்ன ஆச்சரியம்! கொல்லைப் பச்சிலை மருந்துக் குதவாத கதையா யிருக்கிறதே !

உலகிலுள்ள சிற்பிக ளனைவரும் நமது நடராஜ விக்ரகத்தைக் கண்டு பிரமித்து நிற்கின்றனர். வெண்கல வார்ப்பட வேலை தமிழ் நாட்டிலிருந்ததைப்போல அவ்வளவு மேன்மையாக வேறெந்த நாட்டிலும் இருந்ததில்லை. 'எங்க'ளுடையது என்று காட்டுவதற்கு, பழங்கால வெண்கல வேலைப்பாடு ஒன்றாவது ஐரோப்பியனிடம் உண்டா ? கிடையாது. சிற்றுளி வேலையிலும் தமிழர் கிரேக்கர்களுக்குச் சமமாக ஒரு காலத்தில் இருந்தோம் ; மகாபலிபுரத்திலுள்ள மகிஷாசுர மர்த்தினியின் உருவம் ஒன்று போதுமே இதை மெய்ப்பிப்பதற்கு. இதையெல்லாம் நாம் இன்று மறந்துவிட்டு, ஜப்பானிலிருந்து வரும் பூனைப் பொம்மையையும், சீமையிலிருந்து வரும் துரைசாணிப் பொம்மையையும் புகழ்ந்து கொண்டிருக்கிறோம்; என்ன வெட்கக்கேடு!

'சித்திரமில்லாவிட்டால் சிற்பமில்லை' என்று ஸ்ரீயுத ராமலிங்கம் பிள்ளை சொன்னார். தமிழர் ஓவியக் கலையில் மிகவும் வன்மை பெற்றிருந்ததால்தான் சிற்றுளி வேலையிலும் செம்மை பெற்றிருந்தனரென அறியக்கிடக்கிறது. ஆனால் இன்றைக்கு அத்தகைய அபூர்வச் சித்திர வன்மை தமிழரிடம் இருக்கிறதாவென்று கேட்டால், 'இல்லை' என்று ஈனஸ்வரத்தில் சொல்லவேண்டி யிருக்கிறது.

தமிழா ! வங்காளத்துக்குச் சென்று பார் ! இந்த இருபது வருடத்துக்குள் அங்கு எவ்வளவு தூரம் சித்திரக் கலை அபிவிருத்தி யடைந்திருக்கிறது தெரியுமா ? ஸ்ரீ நந்தலால் வசு, ஸ்ரீ முஜும்தார், அவனீந்திரர் போன்று எத்தனையோ சித்திரக்காரர்கள் அங்கு தங்கள் கை வன்மையை உலகுக்கு வீசிக் கொண்டிருக்கின்றனர். 'வங்காள ஓவியம்' என்று ஓர் வகை ஓவியத்தையே சிருட்டிசெய்த பிரும்மாக்கள் அவர்கள். தமிழர் ஓவியம், தமிழர் சித்திரம், தமிழர் சிற்பம் என்று எடுத்துக் காட்டுவதற்கு இன்றைக்கு நம்மிடம் ஒன்று மில்லையே. பழமைத்தானே திரும்பத் திரும்ப எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

இயற்கையாகவே சில தமிழருக்குச் சித்திரமெழுதும் சாமர்த்தியம் உண்டு. அதை அவர்கள் அபிவிருத்தி செய்ய வேண்டும். 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பது ஒரு பாட்டின் முதல் வரியாகும். வெறுமனே கோலம் போடுவதிலும் கருமணி வேலை செய்வதிலும் மட்டுமே நமது பெண்மணிகள் இருக்கவேண்டுமா ? சித்திரக் கலையில் அவர்கள் சிரத்தை காட்டினால் நமது நாகரிகத்துக்கு எவ்வளவு உதவியா யிருப்பார்கள் தெரியுமா. ஆகவே,

சித்திரமெழுதும் சக்தியுள்ள தமிழர்கள் உட்கார்ந்து படம் எழுதத் தொடங்க வேண்டும். 'இந்தியன் இங்கி' படம் எழுதி அனுப்பினால் பிரசுரிக்கக் கூடியவைகளைச் 'சங்கி'ல் வெளியிடுவோம். சிறந்த வர்ணப் படங்கள் எழுதியிருந்தால் அவைகளைப் புகைப்பட மெடுத்துப்போட்டு விமரிசனமும் செய்ய ஏற்பாடாகி யிருக்கிறது. ஆனால், இதற்கெல்லாம் தமிழரிடை சிரத்தை வேண்டும். சுறுசுறுப்பு வேண்டும். உட்காரவேண்டும். நமது நாகரிகத்துக்கேற்ப எழுத வேண்டும், அனுப்பவேண்டும். வீரம், சோகம், விநோதம் முதலிய எந்த ரஸமாவது சித்திரிக்கப்பட்டு, இயற்கையும் எழிலும் கலந்துள்ள சில படங்களை அடுத்த தபாலிலேயே 'சங்கு' எதிர்பார்க்கலாமா ?

வங்காளத்திலும், ஆந்திர நாட்டிலும் 'சித்திர மண்டலங்கள்' இருப்பது போன்று, தமிழ் நாட்டிலும் ஓவியச் சங்கமொன்று ஏற்படுத்த வேண்டுமென்ற ஆசையும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

—சங்கு ஸுப்ரஹ்மணியன்.
ஆசிரியன்.

அடிகளை வரவேற்க

நீங்கள் ஆயத்தமா?



சென்னை விஜயம்

20—12—1933

பொது நிதிக்கு உதவுங்கள்

சேரி சேவையில் சீக்கிரம் சேருங்கள்

நன்றே செய்க - இன்றே செய்க

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.